சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.



61. வில்லின் கதை

ராமனுடைய அழகை நோக்கியதும் "என் அருமை மகள் பாக்கியம் செய்தவள்தான்" என்று மனக்கோட்டை கட்டினான் ஜனகன். வில்லை நினைத்துப் பார்த்ததுமே, "அந்தக் கோட்டையெல்லாம் இடிந்து விடுமே!" என்று மனம் நடுங்கத் தொடங்கி விட்டது. வில்லும் வந்து சேர்ந்தது, கண்முன்னே.

இப்போது ராமனுடைய அழகையும் கண்ணால் பார்க்கிறான், பார்த்து அதே கண்களால், அந்த 'வேதனை தருகின்ற வில்'லையும் பார்க்கிறானாம். உடனே உள்ளத்தில் நிகழ்ந்ததென்ன? பிறகு நடந்ததென்ன?

போதகம் அனையவன்
பொலிவு நோக்கி, அவ்
வேதனை தருகின்ற
வில்லை நோக்கித், தன்
மாதினை நோக்குவான், — 213
மனத்தை நோக்கிய
கோதமன் காதலன்
கூறல் மேயினான்.

[போதகம் — யானைக் குட்டி. அனையவன் — ஒத்தவன். பொலிவு — அழகு. மாது—(இங்கே) மகள். கோதமன் காதலன் — கௌதம முனிவனுடைய புதல்வனாகிய சதானந்தன். கூறல்மேயினான் — சொல்லத் தொடங்கினான்.]

ராமனையும் பார்த்து வில்லையும் பார்த்ததும், சீதையையும் பார்த்துவிடுகிறான் தன் மனக்கண் முன்பு. ராமனுடைய அழகைமட்டும் நோக்கியபோது, சீதையை மணமகளாக மனக்கண்முன் நோக்கியவன், இப்போது வில்லை நோக்கியதும், சீதையை என்றும் மணமாகாத கன்னிகையாகவே பார்க்கிறானாம். இந்த மனநோக்கு அரசன் முகத்திலும் பிரதி

பலிக்கிறது. எனவே அந்த முகத்திலேடு அந்த அகத்தையும் நோக்கி விட்
டான், புரோகிதனுகிய சதானந்த முனிவன்.

ராமனுடைய அழகு, சக்தியை மறைத்து ஜனகன் கண்களையும்
ஏமாற்றி விடுகிறது. " இந்த அழகனை — இந்தச் சுகுமாரனை — வில்லை
வளைத்தலாகிய அந்தக் கொடுந் தொழிலில்தான் எப்படி ஏவுவது? தகாது
தகாது !" என்று மனச் சாட்சி சொல்லத் தொடங்கி விட்டதாம். விச்வா
மித்திரனுடைய வாக்கிலே எவ்வளவோ நம்பிக்கை யுள்ளவன்தான். ராம
னுடைய மகாபலத்தை அந்த முனிவன் எவ்வளவோ வற்புறுத்தியு மிருக்கி
ருன். எனினும் ராமனுடைய பேரழகும் அந்தப் பெரிய வில்லும், பார்க்கப்
பார்க்க ஜனகனுடைய உள்ளத்தையும் தடுமாறச் செய்துவிட்டன.

* * * *

இந்த நிலையை அறிந்து கொண்ட சதானந்த முனிவன் ஜனகனை
ஒரு பார்வை பார்த்துவிட்டு விச்வாமித்திர முனிவனை நோக்கி வில்லின்
வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறன். சிவதனுசு அல்லவா? "மேரு
மலையையே வில்லாக வளைத்த சிவபெருமான் உபயோகித்த வில் இது !"
என்ற சொல்லுகிறன். இந்த வில்லைச் சிவபெருமான் உபயோகிக்க
நேர்ந்த அந்தப் பயங்கரமான சந்தர்ப்பத்தையும் ஞாபகப்படுத்துகிறன்.

இமையவில் வாங்கிய
ஈசன், " பங்(கு)உறை
உமையினை இகழ்ந்தனன் !"
என்ன, ஓங்கிய

214

கமையறு சினத்தன்,
இக்கார்முகம்
[கொளாச்
சமையுறு தக்கனர்
வேள்வி சாரவே,

[இமைய—ஹிமயம்;
(இங்கே) மேருமலை.
வாங்கிய — வளைத்து
உறை — தங்குகிற
உமையினை — பார்வதி
தேவியை. என்ன —
என்ற காரணத்தால்
கமையறு —பொறுமை
யற்ற சினத்தன்—கோ
பத்தை உடையவனாய்
கொளா — கொண்டு
சமை—க்ஷமை; பொ
மை. தக்கனர்—தக்ஷ
என்ற தலைவர். சாரவே
—சேரவே.]

என்று சதானந்த
சொல்லும்போது, அந்
வில்லைப் பார்த்துக்கொ
ண்டே கதைகேட்கிற
கன் விச்வாமித்திரன
ராம லக்ஷ்மணர்களும்.

மலை போலக் கிடக்கும் அந்த வில்லைப் பார்த்துக்கொண்டே, "தக்ஷ வேள்வியை அழித்த இந்த வில் மணவேள்வியையும் அழித்து விடுமோ?" என்று அஞ்சுகிறான் ஜனகன். அந்த யாகம் அழிந்த கதையைச் சுருக்கச் சொல்லுகிறான் சதானந்தன். தெரிந்த கதைதான்; ஆனால் எவ்வளவு ரஸமாய்ச் சொல்லப்படுகிறது!

சிவனுடைய உடம்பிலே ஒரு பாதி என்று சொல்லும்படி வாழ்கின்ற ஸஹதர்மிணியான உமாதேவியை இகழ்ந்து விட்டானாம் தக்ஷன். தமக்கு அந்த யாகத்திலே அவிர்ப்பாகம் கொடாமல் இகழ்ந்ததற்குக் கூட, அவ்வளவு கோபம் பொங்கவில்லை என்பது குறிப்பு. 'ஸதிபதி' என்றால் உமையும் சிவனும் போல — என்பார்கள். உமைக்கு 'ஸதி' என்றும் பெயர். தக்ஷன் மகள்தான் அவள். 'தாக்ஷாயணி' என்ற பெயரும் உண்டு. தக்ஷன் தாரை வார்த்துக் கொடுக்க, மணம் புரிந்து கொண்டவர்தான் சிவபெருமான். எனினும், தன் யாகத்தைப் பார்க்க வந்த மகளை நோக்கித் தக்ஷன், "அந்தப் பித்தனுடைய மனைவியாகிய நீ என் எதிரில் நிற்க வேண்டாம்!" என்று இகழ்ந்ததைக் கேள்விப்பட்டதும், சிவபெருமான் பொறுமையை அப்படியே இழந்து விட்டாராம். அந்தப் பெருங் கோபத்திலே உதித்த வீரபத்திரர், இந்த வில்லைத் தூக்கிக் கொண்டு தக்ஷ யாகத்தை அழிக்கப் புறப்பட்டாராம்.



சிவ பெருமானுடைய கோபமே வீரபத்திரரூபம் தரித்துப் போயிற்றென்றுதான் சொல்ல வேண்டும். இதனால் தான்,

மலையை வில்லாக வளைத்த சிவபெருமானே மலைபோன்ற இந்த வில்லையும் தூக்கிக்கொண்டு தக்ஷயாக சாலையைச் சேர்ந்தார்—என்கிறான் சதானந்தன். சேரவே, நேர்ந்ததென்ன? எவ்வளவு படுவேகமாகக் காரியங்கள் நடைபெறு கின்றன! எவ்வளவு வேகமாக அந்தக் கதை முடிகிறது! பாருங்கள்.

உக்கன பல்லொடு
கரங்கள்; ஓடினர்,
புக்கனர் வானவர்
புகாத சூழல்கள்!
தக்கன்நல் வேள்வியில்
215 தழலும் ஆறின!
முக்கண்எண் தோளவன்
முனிவும் ஆறினன்!

[உக்கன — உதிர்ந்து சிதறிப் போயின. கரம் — கை. புக்கனர் — புகுந்தனர். சூழல் — இடம். முக்கண் எண் தோளவன் — மூன்று கண் களையும் எட்டுத் தோள்களையும் உடைய சிவன். முனிவு—கோபம்.]

ரௌத்ராகாரமாய் இந்த வில்லோடு யாக சாலையில் குதித்தது தான் தாமசம். பற்களும் கைகளும் உதிர்ந்து சிதறத் தொடங்கினவாம். ஆம், அந்த யாகத்திற்கு உதவியாக வந்திருந்தவர்களுடைய பற்களும் கரங்களும் தான். ஓடினார்களாம் தேவர்கள்; நிலை கெட்டு ஓடி நுழைய முடியாத இடங் களிலெல்லாம் எப்படியோ நுழைந்து பதுங்கிக் கொண்டார்களாம். தக்ஷ யாக மும் தழல் ஆறிக் குளிர்ந்தது; சிவ கோபமும் தழலாறிக் குளிர்ந்துவிட்டதாம்.

அந்த யாகத்திற்கு உதவிய தேவர்களையும் மன்னித்து அருள்புரிந்தார் சிவபெருமான். எனினும் தேவர்கள் நடுங்கிக்கொண்டேயிருந்தார்களாம். காரணம் இந்த வில் அவர் கையில் இருந்தது தான்! தேவர்களுடைய நடுக் கத்தைப் போக்குவதற்காக இந்த வில்லை இந்த ஜனக மகாராஜனது குலத் திலே தோன்றிய பூர்வீக ராஜா ஒருவனிடம் வைத்துப் போய்விட்டாராம் சிவபெருமான். இந்த வில்லைக் கண்டும் நடுங்காதவன் இந்த ராஜாவின் முன் னோர்களில் ஒருவன்தான் என்று எவ்வளவு பெருமையோடு சொல்லுகிறான் சதானந்தன்! பாரம்பரையாக இந்த வில் இந்த ஜனகனுக்குக் கிடைத்தது என்பது குறிப்பு. இவ்வளவும் சொன்னபிறகு வில்லின் வல்லமையைச் சொல்லவா வேண்டும்?

வார்சடை அரன்நிகர்
216 வரத! நீஅலாஸ்
யார்உளர் அறிபவர்?

[வார்—நீண்ட. வரத — வரந்தரக் கூடிய முனிவனே.]

"விசுவாமித்திர மகார்ஷியே! சிவ தனுசின் வல்லமையைச் சிவனுக்கு நிகரான நீர்தான் அறியக்கூடியவர்!" என்கிறான் சதானந்தன். "இனி மேல் இந்த வில்லை நாணேற்றும் வீரனுக்கு மனைவியாவதற்கு உரிய சீதை யின் வரலாற்றைச் சொல்லப் போகிறேன்" என்கிறான். "இதற்குத் தோன்றியவள் சீதை" என்கிறான். இந்த வில்லைக் கந்யாசுல்கமாக வைக் கும்படி தோன்றிய கன்னிகை யல்லவா?

"இந்தக் கந்யாசுல்கத்தினால் சீதை என்றுமே கன்னிகையாக இருந்துவிடுவாளோ? இவளை மணந்து கொள்வதற்கு ஏற்ற புருஷன் கிடைக்க வேணுமே!" என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஆறு வார்த்தைத் தரும்படி ராமனை இங்கே விசுவாமித்திரன் அழைத்து வந்திரு கிறானல்லவா? எனவே விசுவாமித்திரனை, "வரத!" என்று அழைப்பது எவ்வளவு பொருத்தமானது!

சுந்தர ராமாயணம்



பி. ஸ்ரீ.

62. அழகு தவம் செய்தது

அரசனும் அவனைச் சேர்ந்தவர்களும் நிலத்தை உழுதார்களாம். ஆம், கலப்பை பிடித்து உழுதார்களாம், வில்லைப் பிடித்த கைகளால். கலப்பையோ இரத்தினம் பதித்த பொற்கலப்பை. அந்தக் கலப்பையில் வயிரக் கொழுவைக் கட்டி உழுதார்களாம். ஏன் இந்த அதிசய உழவு?

"யாகசாலை அமைப்பதற்காக நிலத்தை உழுதோம்" என்கிறான் சதாநந்தன். அந்தக் கொழுவின் முனையிலே—அந்த உழவு சாலிலே சூரியோதயமா?

உழுகின்ற கொழுமுகத்தின்;
  உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவிமடந்தைத்
  திருவெளிப்பட் டெனப், புணரி
எழுகின்ற தெள்ளமுதோ(டு)
  எழுந்தவளும் இழிந்(து)
    ஒதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப்
  பெண்ணரசி தோன்றினள்.

[கொழுமுகம்—கொழுவின் முனை. கதிர் — சூரியன். புவி மடந்தைத் திரு— பூமிதேவியின் கர்ப்பத்திலுள்ள செல்வம். வெளிப்பட்டென — வெளிப்பட்டாற் போல. புணரி — சமுத்திரம்; (இங்கே) பாற்கடல். தெள்ளமுது — தெளிந்த அமிர்தம். இழிந்து—இறங்கி. நன்னலம் — மிக்க அழகு.]

சூரியோதயமல்ல, 'சூரியோதயம்' பொழிகின்ற திரு முகம் அது. ஆஹா, அந்த ரூப சௌந்தரியத்தை என்னென்பது! பூமிதேவி தன் கர்ப்பத்திலே எவ்வளவு செல்வத்தை வைத்துக்கொண்டு உலக மக்களுக்குக் கொடுத்து வருகிறாள்! கொழுமுனை பட்டதும், எவ்வளவு வளங்களைக்

கொட்டிக் கொடுக்கிறான்! எவ்வளவு அழகுகளைக் காட்டுகிறான், இந்திர ஜால மஹேந்திர ஜாலங்கள் காட்டுவது போலே! அத்தனை அழகுகளும் வளங்களும் செல்வங்களும் ஓர் உருவமாக அமைந்து வெளிப்பட்டது போலிருக்கிறதாம், கொழுமுனையிலே உதித்த ரூப சித்திரம். "புவிமடந்தைத்தரு" பூமிக்குள்ளிருந்து வெளிப்பட்டாற்போல வந்து தோன்றினாளாம் அந்தப் பெண்ணரசி.

ஆம், தோன்றியதும் அரசியாகி விட்டாள். அதற்கு முன் சௌந்தரிய ஸிம்மாஸனத்திலே 'பெண்மை' என்ற ராஜ்யத்திற்கு அரசியாக வீற்றிருந்தவள், அழகுத் தெய்வமும் செல்வத்தின் அதிதேவதையுமான ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியேதான். அப்படியிருந்தும் இந்தச் சீதை தோன்றியதும் இவளே 'பெண்ணரசி'யாகி விடுகிறாள்! மஹாலக்ஷ்மி அரசை இழந்து விட்டாளாம். ஒரு பெரும் புரட்சி, அஹிம்ஸை முறையிலேயே.

பாற்கடலிலே அமிர்தத்தின் சகோதரியாகத் தோன்றியவள் மஹாலக்ஷ்மி. தோன்றியதும், அப்படியே அழகு-ராணியாக அமர்ந்து விட்டாள். அந்தச் சிங்காசனத்திலே இதுவரை ஸ்திரமாக இருந்தவள்தான். சீதையைக் கண்டதும் அந்த உயர்ந்த சிங்காசனத்திலிருந்து அப்படியே இறங்கி வந்தாளாம். படிக்கட்டுகளில் சீதை ஏறிக் கொண்டதும், அந்த லக்ஷ்மி ஒதுங்கி நின்றாளாம். சிங்காசனத்திலே சீதை அமர்ந்ததும் மஹாலக்ஷ்மி தொழுது நின்றாளாம். மஹாலக்ஷ்மியும் "இழிந்து ஒதுங்கித் தொழுகின்ற" பேரழகு வாய்ந்தவள் சீதாலக்ஷ்மி — என்று எவ்வளவு ரஸமாகச் சதானந்தன் வர்ணிக்கிறான் சீதையின் பிறப்பை.



'மினர்வா' என்ற அறிவுத் தெய்வம் 'ஜோவ்' அல்லது 'ஜூபிடர்' என்ற பிரகஸ்பதி பகவானது சிரத்திலிருந்து பரிபூர்ண சௌந்தர்யத்துடன் உதித்து விட்டதாக ஐரோப்பியப் பழம்புராணம் (classical mythology) சொல்லுகிறது. அழகு-ராணியாகிய சீதையும் பரிபூர்ண சௌந்தரியத்தோடு பூமியின் கர்ப்பத்திலிருந்து உதித்தாள் என்பது கம்பன் கதை. சீதையின் பிறப்பைக் குறிக்கும் இந்தச் செய்யுள் கம்பன் கவிதையின் பிறப்பிற்கும் ஓர் அறிகுறி யெனலாம்.

*   *   *

"சீதையின் ரூப சௌந்தரியம் இப்படி யென்றால் குண சௌந்தரியத்தை என்னென்பது?" என்கிறான் சதானந்தன். குண சௌந்தரிய மில்லாத சௌந்தர்யமும் சௌந்தரியமாகுமோ?

பொற்பில் நின்றன
பொலிவு

[பொற்பு — (இங்கே) குண சௌந்தரியம். பொலிவு — (இங்கே) பொற்பின் மலர்ச்சியாகிய ரூப சௌந்தரியம்.]

—அதாவது, குணசௌந்தரியத்திலே வேரூன்றி வளரும் ரூப சௌந்தரியந்தான் நிலைபெற்ற உண்மையான அழகு — என்பது கவிஞன் கொள்கை.

சீதையின் ரூப சௌந்தரியத்தையே சொல்ல முடியாமல் சொல்லும் சதானந்தன் குணசௌந்தரியத்தைக் குறித்து என்னதான் சொல்லப் போகிறானோ? — என்று அதிசயிக்கிறோம். அதிசயத்தின் மேல் அதிசயமாக வருகிறது சதானந்தன் வார்த்தையும் :

குணங்களை என் கூறுவது?
கொம்பினைச்சேர்ந்(து) அவைஉய்யப்
பிணங்குவன ; அழ(கு) இவளைத்
தவம்செய்து பெற்றதுகாண் !

[என் — என்ன. கொம்பு — பூங்கிளை போன்ற சீதை. உய்ய — உயர்துபோதமாறு ; நல்வாழ்வு பெறும்படி. பிணங்குவன — (ஒன்றோடொன்று) போட்டி போடுகின்றன.]

பூங்கிளையைச் சேர்ந்திருக்கும் பூக்கள்தானே மலர்ச்சி பெற்று வாழ்வு பெற்றிருக்கும்? அப்படியே குணங்களும் சீதை என்ற பூங்கொம்பைச் சேர்ந்துதான் மலர்ச்சி பெறவேண்டுமாம், வாழ்வு பெறவேண்டுமாம். எனவே குணங்களெல்லாம் "நான் முந்தி! நான் முந்தி!" என்று போட்டி போட்டு, "என்னைக் கொள்ள வேணும், என்னைக் கொள்ள வேணும்" என்று வந்து சேருகின்றனவாம் சீதையிடம்.

இப்படிக் குண சௌந்தரியங்களாலும் சோபிக்கும் சீதை, "அழகு இவளைத் தவஞ் செய்து பெற்றது காண்!" என்று சொல்லும்படி விளங்குகிறாளாம்.

* * * *

அந்த அழகுத் தெய்வமான மஹாலக்ஷ்மியைத் தேவர்கள் மணம் செய்து கொள்ள விரும்பினார்களாம், அவள் அழகின் மூர்த்தியான திருமாலுக்கே உரியவள் என்பதை அறிந்து கொள்ளாமல். அப்படியே இந்த அழகுத் தெய்வமான சீதாலக்ஷ்மியையும் அரசர்கள் மணந்து கொள்ள ஆசைப்பட்டார்களாம்.

அத்திருவை அமரர்குலம்
ஆதரித்தார் என அறிஞ !
இத்திருவை நிலவேந்தர்
எல்லாரும் காதலித்தார்.

[அமரர் குலம்—தேவர் கூட்டம். ஆதரித்தார் என — விரும்பினது போல.



அறிஞ — அறிஞனகிய
விச்வாமித்திரனே.]

சேனு சமுத்திரத்தோடு வந்து கோஷித்தார்களாம் அரசர்கள், மதயானை போல வந்து மணம் பேசினர்களாம். அவ்வளவு மிடுக்கு, அவ்வளவு படாடோபம்! அப்படிப்பட்டவர்களுக்கு மறுமொழியாகச் சிவதனுசைக் காட்டினர்கள் ஜனகனும் சதாநந்தனும். இந்த வில்லுக்கும் ஆற்றல் இல்லை அவர்களுக்கு; மன்மதனுடைய மெல்லிய வில்லுக்கும் ஆற்றல் இல்லையாம். ஆசை ஒருபுறம் அவமானம் ஒருபுறம், கோபம் ஒருபுறம். “எல்லாரும் ஒன்று சேர்ந்து எங்களுடன் சண்டைக்கு வந்துவிட்டார்கள்” என்கிறன் சதாநந்தன்.

இத்தகைய சண்டைகளால் ஜனகனுடைய சேனு சமுத்திரமும் வற்றிப் போயிற்று; அந்தப் பகையரசர்களுடைய சேனு சமுத்திரமும் வற்றிப் போயிற்றாம். ஜனகனுடைய சேனை,

செம்மன்னர் புகழ்வேட்ட
பொருளேபோல் தேய்ந்ததால்

[செம்மன்னர் — நேர்மைக் குணமுள்ள அரசர்கள். புகழ் வேட்ட பொருள் — புகழை விரும்பிக் கொடுக்கும் செல்வம். தேய்ந்ததால் — தேய்ந்தது.]

என்று சொல்லும் சதாநந்தன்,

அம்மன்னர் சேனைதம(து)
ஆசைபோல் ஆயிற்றல்!

என்கிறன்.

பொருளைக் கொடுத்துப் புகழைத் தேடும் வள்ளல்களின் பொருள் போலத் தேய்ந்தது ஜனகனுடைய சேனை என்றும், அந்தப் பகையரசர்களுடைய சேனை அவர்களுடைய ஆசை போலத் தேய்ந்தது என்றும் கூறுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள்!

ராமாயணம்



பி. ஸ்ரீ.

63. கொழுங்கனல் போல் எழுந்தான்!

சிவ தனுசுக்கும் மன்மத பாணத்திற்கும் தோற்ற அரசர்கள் முடிவில் தாங்கள் ஜனகனோடு செய்த போரிலும் தோற்றுப் போனார்கள். அன்று முதல் இன்றளவும் அவர்கள் இந்த வில்லருகே தலைகாட்டத் துணிந்ததில்லை—என்கிறான் சதாநந்தன்:

அன்றுமுதல் இன்றளவும்
ஆருய இந்தச் சிலையருகே
சென்றும் இலர்; போய்ஒளித்த
தேர்வேந்தர் திரிந்தும் இலர்;
என்றுஇனி மணம்இல்லை;
என்றிருந்தோம்: இவன்ஏற்றின்
நன்று: மலர்க் குழல் - சீதை
நலம்பழுதா காதென்றான்.

[சிலை — வில். ஏற்றின் — (வில்லை நாண்) ஏற்றினால். நலம்—அழகு; பாக்கியம்.]

அன்று அப்படியே போய் ஒளித்துக் கொண்டவர்கள் தான்; அப்பால் அந்த அரசர்கள் திரும்பி வரவேயில்லையாம். வெளியே தலைகாட்டித் திரிந்ததும் இல்லையாம். "இனி என்றைக்கும் சீதை மணமில்லாமலே இருக்க வேண்டியவள் தான்!" என்று எண்ணத் தொடங்கி விட்டார்கள். இந்த நிலையில், "ராமன் வில்லை வளைத்து நாண் ஏற்ற முடியுமானால் நல்லதுதான்" என்கிறான். "அப்படியானால் சீதையின் அழகு பழுதாகாது" என்று கூறி முடிக்கிறான். "சீதையின் பாக்கியம் பழுதாகாது" என்பதும் குறிப்பு.

ஜனகனும், "ஐயன் வில் ஏற்று மேல், இடர்க் கடல் ஏற்றம்!". என்றுதான் சொன்னான். அதை ஒட்டியே சதாநந்தனும், "இவன் ஏற்றின், நன்று" என்கிறான். ஜனகன் வாக்கிலே தொனித்த சிறு சந்தேகம் சதாநந்தன் வாக்கிலும் தொனிப்பது போலத் தோன்றுகிறது.

ஜனகனுக்கு ராமனுடைய திறமையில் சிறிது சந்தேகம் ஏற்பட்ட போதிலும், சீதையின் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கைதான். அதனால்தான், "நோற்றனள் நங்கையும்" என்றான். அந்தக் கருத்தையும் ஒட்டிப் பேசுகிறான் சதாநந்தன். இவன் வாக்கிலும், "சீதையின் அதிர்ஷ்டத்தை முன்னிட்டாவது ராமன் வெற்றி பெற வேண்டும்" என்ற குறிப்பும் தொனிக்கிறது.

* * * *


சதாநந்த முனிவன் பேசி முடித்ததும், விச்வாமித்திர முனிவன் என்ன செய்கிறான்? இந்த அதி முக்கியமான சந்தர்ப்பத்தை அதோ பாருங்கள், கவிஞன் காட்டும் ஜாலக்கண்ணாடி மூலமாக :

நினைந்தமுனி பகர்ந்ததெல்லாம்
நெறி உன்னி, அறிவனும்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப்
போரேற்றின் முகம்பார்த்தான் ;
வனைந்தனைய திருமேனி
வள்ளலும்,அம் மாதவத்தோன்
நினைந்தஎலாம் நினைந்(து),அந்த
நெடுஞ்சிலையை நோக்கினான்.

[நினைந்த முனி—ஆலோசித்துப் பேசிய சதாநந்தன். நெறி உன்னி—முறையாக ஆலோசித்து. அறிவன் — (ராமன் திறமையை) அறிந்தவனாகிய விச்வாமித்திரன். புனைந்த — அழகாய் முடித்துக்கொண்ட. சடை முடி — ஜடா மகுடம். துளக்கி — அசைத்து. போர் ஏறு — போரில் வல்ல ஆண் சிங்கம் போன்ற ராமன். வனைந்தனைய — அழகைத் தொட்டுத் தொட்டு வனைந்தாற்போன்ற.]

சதாநந்தனும் விஷயங்களையெல்லாம் மனத் தராசில் போட்டு நிறுத்துப் பார்த்து, நினைத்துப் பார்த்துப் பேசியவன்தான். அந்த முனி அப்படி நினைத்துச் சொன்னதையெல்லாம் விச்வாமித்திர முனியும் தன் மனத் தராசில் போட்டு முறையாகவே ஆலோசித்துப் பார்த்தானாம். ஆனால் விச்வாமித்திரனே ராமன் திறமையை அறிந்தவன் (அறிவன்); சதாநந்தனோ அறியாதவன்.

விச்வாமித்திரன் அறிந்தவனாகையால் தான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. செயல்தான் பதில் சொல்லவேண்டும் என்று பளிச்சென்று தீர்மானித்து விடுகிறான். ஜனகனுடைய சந்தேகமும் தடுமாற்றமும் சதாநந்தனையும் ஓரளவு பிடித்துக் கொண்டன அல்லவா? அந்த நோக்காட்டை நாடி பிடித்துப் பார்த்தவன் போல், ஒரே மருந்து ராமனின் செயல்தான் என்று கருதுகிறான்.



சீதையின் அழகுக்கு ராமன் அழகு சற்றும் தாழ்ந்ததில்லை என்று கருதிய போதிலும் ஜனகனும் சதானந்தனும், ராமனுடைய ஆண்மையைக் காட்டிலும் சீதையின் அதிர்ஷ்டத்தையே பெரிதாக நினைத்து விட்டது போலப் பேசினார்கள். விச்வாமித்திரனுக்கோ, சீதையின் அதிர்ஷ்டத்தைக் காட்டிலும், அழகைக் காட்டிலும், ராமன் அழகும் பேராண்மையுமே பிரமாதமாய்க் காண்கின்றன.

தவராஜாவாகிய விச்வாமித்திரன் தனது தவக்கிரீட மாகிய ஜடைமுடியைக் கம்பீரமாக அசைத்துக் கொண்டு, ராமன் முகத்தைப் பார்க்கிறான். அவனிடத்திலும் ஒன்றும் பேசவில்லை.

ராமன், போரில் வல்ல சிங்கம் போல் கம்பீரமாக வீற்றிருக்கிறான். எனினும் அந்தப் பேராண்மை நீறு பூத்த நெருப்பைப்போல் பேரழகிலே மறைந்து ஒளிர்கிறது. அழகைத் தொட்டுத் தொட்டு வரைந்த சித்திரம் போலிருக்கிறது அந்தத் திருமேனி. அந்த வசீகர மேனியை அப்படியே நமக்கும் சுட்டிக் காட்டுவது போல் கவிஞன், "வரைந்தனைய திருமேனி வள்ளல்" என்கிறான்.

இங்கே இந்த அழகனை வள்ளல் என்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. "என்றும் இனி மணமில்லை" என்றிருந்த சீதையின் குறை தீர, வண்மை பொழியும் அழகல்லவா?

விச்வாமித்திரன் ராமனைப் பார்க்க, ராமன் வில்லைப் பார்க்கிறான். அந்த மஹரிஷி நினைத்ததையெல்லாம் அந்தப் பார்வையிலிருந்தே கிரகித்



த்துக் கொள்கிறான். இப்போது முனிவன் நினைப்பெல்லாம் ராமன் நினை
பாகி விடுகிறது.

இனி, நினைப்பின் வேகத்திலே நடைபெறப் போகும் செயலைக் க
ளிப்போம் :

பொழிந்தநெய் ஆகுதி
வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனல்
என்ன எழுந்தான் :
'அழிந்தது வில்' என
223 விண்ணவர் ஆர்த்தார் ;
மொழிந்தனர் ஆசிகள்
முப்பகை வென்றார்.

[விண்ணவர் — தேவர். ஆர்த்தார் — ஆரவாரம் செய்தார்கள். மு
பகை வென்றார் — காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று பகையையு
வென்றவர்கள்.]

ராமன் வில்லை நோக்கி எழுந்தான் என்பது தான் இந்தப் பாட்டில்
விஷயம். அவன் அப்படி எழுந்ததற்கு உபமானம் எப்படி ? கவிஞன் வெ
தூரம் போகவில்லை. ஜனகன் முதலானவர்கள் யாகத்தை முடித்துவிட்
இப்போது தானே ராஜமாளிகைக்கு வந்திருக்கிறார்கள் ? அந்த யாகசாலை
யிருந்தே உபமானம் கிடைத்து விடுகிறது.

ஹோம குண்டத்திலே நெய்யை ஆகுதியாகப் பொழியும்போது, அந்
நெய் விழுந்த வழியே — அந்த வாய் வழியே — ஹோமத் தீ பொங்கி ஓங்
கிறதல்லவா? "ஓங்கிக் கொழுந்து எழுகிறது" என்பது "எழுந்த கொழு
கனல்" என்பதன் கருத்து. அப்படி எழுகிறானும் ராமன். "எழுந்
கொழுங்கனல் என்ன எழுந்தான்!" இந்த நிலையில் ராமனுக்கு, வன்மை
யோடு நன்மையும் உள்ள ஹோமத் தீயை உபமானமாக்கும் சாதுரிய
தைப் பாருங்கள்.

ஏற்கெனவே காதலியைக் கண்டவன். காதல் வீரத்தை வி
ஜொலிக்கச் செய்கிறது. நெய் பொழிந்த நெருப்பாகப் பொங்கி எழும் வீர
உள்ளும் புறமும் நிறைந்து ஜொலிக்கிறது. இத்தகைய வீராவேசத்தோ
ராமன் எழுந்த தோற்றமே வெற்றியின் தோற்றமென்று தேவர்க
கோஷிக்கிறார்கள். "இத்தகைய வீரனைத்தான் நாமும் ஆசீர்வதிப்ப
தகும், தகும்!" என்று கருதியவர்களைப்போல் ஆசி கூறுகிறார்கள் மகா
மக்களான முனிபுங்கவர்கள்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

64. காதலின் கன்னி வெற்றி

நீறுபூத்த நெருப்பைப் போல் இருந்த ராமன் நெய்பொழிந்த நெருப்பைப் போல் பொங்கி எழுந்ததும், அந்த வீர சௌந்தரியம் அங்கே யிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களை என்ன பாடு படுத்துகிறது! ஒரு வில்லுக்கு முன் எத்தனை விற்கள் என்ன பாடு படுகின்றன!

ராமன் சிவதனுசை முறிப்பதற்கு முன்னமே ஆயிரம் வில்லை முறித்து விட்டானும் மன்மதன். ஆம், அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களின் உள்ளங்கள் தோறும் எய்து எய்து. அவ்வளவு காதல் பொங்கி எழுந்தது அந்த உள்ளங்களிலே, அந்த வீர சௌந்தரியம் அப்படி ஜொலித்த போது!

இத்தகைய மனப் பாங்குடன் மாதர்கள் பலரும் பலவாறு பேசுகிறார்கள். ராமன் போகிற டோக்கைக் கவனித்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண்கள் பேசுகிற பேச்சும் கொஞ்சக் கொஞ்சமாக நமது காதில் விழுகிறது.

அவர்களில் சிலர் அந்த வில்லின் நீளத்தையும் வலிமையையும் கண்டு பிரமித்துப் போகிறார்கள். அப்படிப் பிரமித்தவர்களாய், "ஐயோ, சீதைக்கும் வாழ்வில்லையோ!" என்று ஏங்கிப் போகிறார்கள். வேறு சில பெண்கள் இன்னும் காரமாகப் பேசுகிறார்கள். "இவன் இந்த வில்லை வளைக்கவில்லையென்றால், சீதையும் நாமும் அக்கினிப் பிரவேசம் செய்ய வேண்டியது தான்!" என்று கூடச் சொல்லி விடுகிறார்கள். இந்தக் கடுஞ் சொல் காதில் விழும் போதே, அவர்களுடைய தோற்றத்தையும் பார்த்து விடுகிறோம். பார்த்து நாமும் பரவசமாகிறோம்.

இரண்டு கைகளையும் குவித்த வண்ணம் கண்களில் நீர் துளிக்க இப்படிப் பேசுகிறார்கள் என்றால், "இது என்ன, பிரதிக்ஞையா? பிரார்த்தனையா?" என்று சந்தேகம் ஏற்படுகிறதல்லவா? இப்படி அந்த மாதர்கள் இஷ்ட தேவதையை முன்னிட்டுப் பிரதிக்ஞை செய்து கொள்கிறார்கள் என்று ஊகிக்கலாம்.

*　　*　　*　　*

"**சா**த்த அசடு, வடிகட்டின பைத்தியம் நமது மகாராஜா!" என்று கூடச் சிலர் பேசிக் கொள்வது காதில் விழுகிறது :

"வள்ளல் மனத்தை
　　மகிழ்ந்தனன் என்றால்,
'கொள்'என முன்பு
　　கொடுப்பதை அல்லால்,
224 வெள்ளை மனத்தவன்,
　　வில்லை எடுத்(து), இப்
பிள்ளைமுன் இட்டது
　　பேதைமை!" என்பார்.

[வள்ளல்—ராமன். வெள்ளை—அறியாமை; கபடமற்ற தன்மை.]

"ராமன் மனத்தை மகிழ்ந்து விரும்புவதென்றால், அது போதாதா? ஜனகன் குறை தீர அருள் பொழியத் தக்க வள்ளல் அல்லவா? சூது வாது தெரியாதவன்: சீதையைக் கொடுத்துவிட்டு மறு ஜோலி பாராமல், இந்தப் பிள்ளை முன் — கிடைக்கக்கூடிய மாப்பிள்ளையா? — வில்லை எடுத்துப் போட்டிருக்கிறான்! இப்படியும் ஒரு பைத்தியமா?" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். உலக அனுபவம், உலக ஞானம் இல்லாதவன் ஜனகன் என்று தீர்மானிக்கிறார்கள்.

*　　*　　*　　*

விசுவாமித்திரனுக்கும் உலக ஞானமில்லாமல் போய்விட்டதோ?— என்கிறார்கள் இன்னும் சிலர். இவர்களில் சிலர், "ஜனகன் முட்டாளில்லை!" என்றும் நினைக்கிறார்கள். "கொடியவன் அரசன்!" என்றுதான் சொல்லுகிறார்கள். "இவனைக் காட்டிலும் கொடிய அரசன் இல்லை!" என்றுகூட அபிப்பிராயப்படுகிறார்கள். தன் மகளுக்கே கொடியவனல்லவா?

ஞான முனிக்கொரு
　　நாண்இலை என்பார்;
225 கோனிவ னில்கொடி
　　யோன்இலை என்பார்.

[ஞானமுனி—விசுவாமித்திர முனிவன். நாண்—நாணம். கோன்—அரசன். இவனில்—இவனைக் காட்டிலும்.]

'ஞான முனி' என்பதால், விசுவாமித்திர முனியை 'உலக ஞானம் இல்லாத தத்துவ ஞானி' என்று பரிகசிக்கிறார்கள் என்பது குறிப்பு. இவ்வளவு தூரம் பேசும்படி இவர்களை இத்தனை பாடுபடுத்துகிறது ராமனது பேரழகு.

*　　*　　*　　*

இப்படியெல்லாம் பெண்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; ராமனோ வில்லை நோக்கி நடந்து கொண்டிருக்கிறான். எல்லாம் துரிதமாகத்தான் நடைபெறுகின்றன. வர்ணனைக்குத்தான் இவ்வளவு நேரம்!

தோகையர் இன்னன
சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட,
உம்பர் உவப்ப,
மாக மடங்கலும்,
மால்விடை யும்,பொன்
நாகமும், நாகமும்
நாண நடந்தான்.

[தோகையர்—மயில் போன்ற சாயலோடு கூடிய பெண்கள். இன்னன—இவை போன்றவை. ஓகை—உவகை. உம்பர்—தேவர். மாக மடங்கல்—மிகச் சிறந்த சிங்கம். மால்விடை—பெரிய ரிஷபம். நாகம்—(1) மலை; (2) யானை.]

"யானைபோல் — நடந்தது கிடந்தது என் உள்ளம் நண்ணியே!" என்று சீதை ஏங்கி ஈடுபடும்படி அவள் மனத்திலே பதிந்து கிடந்த அந்த நடையழகு இப்போது எவ்வளவு உத்ஸாகத்திற்கும், கவலைகளுக்கும், மகிழ்ச்சி — ஆரவாரங்களுக்கும் இடையே எவ்வளவு கம்பீரமாகக் காண்கிறது!

இந்த நடையின் மகாகம்பீர கதியையே இந்தப் பாட்டின் உருவத்தில் — முக்கியமாகக் கடைசி அடியிலே — சப்த சித்திரமாகக் காண்கிறோம். பாடிப் பாடிப் பாருங்கள்.

* * *

நன்றாகத் துடைக்கப்பட்டுத் தகதக வென்றிருக்கும் வில் ஏதோ ஒரு பொன் மலை போலப் பயங்கரமாய்க் காண்கிறது, பார்ப்பவர்களுக் கெல்லாம். ஆனால் காதலன் கண்களில் அது அப்படிக் காணப்படவில்லையாம்.



ஆடக மாமலை
 அன்னது தன்னைத்,
"தேடரு மாமணி
 சீதையெ னும்பொன்
சூடக வால்வளை
 சூட்டிட், நீட்டும்
227 ஏடவிழ் மாலை இ(து)!"
 என்ன எடுத்தான்.

[ஆடகம் — பொன். அன்னது — போன்றது. தேடரு — தேடிக் கொள்வதற்கு அருமையான. சூடகம் — ஒரு வகைக் கையணி. வால் வளை — வெண்ணிறமான சங்கு வளை ; (இங்கே) அந்த அணிகளை அணிந்த சீதை. ஏடு அவிழ் — இதழ்கள் மலரப்பெற்ற.]

அந்தப் பெரிய வில் ராமன் கண்களுக்கு மலையாகத் தோன்றவில்லையாம் ; மாலையாகத்தான் தோன்றுகிறதாம். ஆம், காதலிக்குச் சூட்ட வைத்திருக்கும் மணமாலையாகிய பூமாலை போலவே காண்கிறது, காதல் நிறைந்த கண்களுக்கு.

"தேடரு மாமணி" என்று காதலியை ஹிருதயத்திலே பிரதிஷ்டை செய்து வைத்திருக்கும் காதல், எவ்வளவு எளிதாக, எவ்வளவு குதூகலமாக, எவ்வளவு வேகமாக, வில்லை முறித்து வெற்றி சூடுகிறது !

* * * *

ராமன் அநாயாஸமாக வில்லை எடுத்ததும் ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம். கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே யிருந்தார்களாம். இமைகளைக் கொட்டாதபடி தடுத்து ஒரே பார்வையாய்ப் பார்த்துக்கொண்டே யிருந்தார்களாம், — "ஒவ்வொரு செயலையும் இம்மி விடாது பார்க்கவேணும்" என்ற பேராசையோடு. அப்படியிருந்தும் அவர்கள் என்ன பார்த்தார்கள் ?

தடுத்திமை யாமல்
 இருந்தவர், தாளில்
மடுத்ததும், நாண்நுதி
 வைத்ததும் நோக்கார் ;
228 கடுப்பினில் யாரும்
 அறிந்திலர் : கையால்
எடுத்தது கண்டனர்,
 இற்றது கேட்டார் !

[தாள் — கால். மடுத்ததும் — அழுத்தியதும். நுதி — முனை. கடுப்பு — வேகம். இற்றது — முறிந்தது.]

வில்லின் ஒரு முனையை ராமன் கால் - பெருவிரலில் வைத்து அழுத்தியதும், மற்றொரு முனை தானே வளைந்து வந்ததென்று அவனுக்கே தோன்றும்படி, அவ்வளவு வேகமாக நாணேற்றப் பார்க்கிறான். மற்றவர்களுக்கோ, — அவர்கள் 'தடுத்து இமையாமல்' பார்த்துக் கொண்டிருந்த போதிலும் — ராமன் வில்லை வளைத்ததும் தெரியவில்லை, நாண் பூட்ட வைத்ததும் தெரியவில்லை. அவன் கையால் வில்லை எடுத்ததைக் கண்டது கண்கள். உடனே வில் முறிந்த சப்தத்தைக் காது கேட்டது. "எடுத்தது கண்டனர் ; இற்றது கேட்டார் !" — அவ்வளவு தான்.

ஏதோ ஒரு செப்படி வித்தை செய்து காட்டுவதுபோலே காட்டிவிடுகிறது இந்தக் கவிதாரூபம், படுவேகமாக வில் முறிந்த வெற்றியை ! — ஆம், ராமனுடைய காதலின் கன்னி வெற்றியை.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

65. விண்ணும் மண்ணும் தழுவின!

சிவ தனுசு லேசாக முறிந்துவிட்டது ராமன் கையில். ஆனால் அந்தப் பேரோசை இடி யிடித்தது போலிருந்தது. "பிரம்மாண்டமே பிளந்து விட்டதோ?" என்று கூடத் தோன்றியதாம் முதல் முதல். அவ்வளவு பயங்கரமாக இடித்த இடி, "சீதா கல்யாணம் இனிது நிறைவேறும்" என்று விரைவில் எல்லாரையும் குதூகலப்படுத்தி விட்டது.

இந்த மங்களகரமான இடிக்குப் பின் மங்களகரமான மழை:

பூமழை சொரிந்தார் விண்ணோர்,
பொன்மழை பொழிந்த மேகம்;
பாமமா கடல்கள் எல்லாம்
பன்மணி தூவி ஆர்த்த!
கோமுனிக் கணங்கள் எல்லாம்
கூறின ஆசி: கொற்ற
நாமவேல் சனகற்(கு) இன்று
நல்வினை பயந்த(து) என்னா.

[விண்ணோர் — தேவர். பாமமா கடல் — பரந்த பெரிய கடல். பன்மணி — பலவகை ரத்தினங்கள். ஆர்த்த — ஆரவாரித்தன. கோமுனி — சிறந்த முனிவர்கள். கணம் — கூட்டம். கொற்றம் — வெற்றி. நாம வேல் — அச்சம் தரும் வேல். பயந்தது — பலித்தது. என்னா — என்று.]

ஒரே குதூகலம் உலகமெல்லாம் — பூமழையும் பொன் மழையும் ரத்தின மழையும் ஆசி மழையுமாக! "ஜனகன் பாக்கியசாலி; அவனுடைய நல்வினைகளெல்லாம் இன்று பலித்தன!" என்ற அந்தக் குதூகலத்திலே மண்ணும் விண்ணும் பங்கு கொண்டனவாம்.

ஒரு நடனக் காட்சி

ஆடவரைக் காட்டிலும் பெண்களுக்கு விசேஷ குதூகலம்:

நல்லியல் மகர வீணைத்
தேனுக, நகையும் தோடும்
வில்லிட வாளும் வீச,
வேல் கிடந்தனைய நாட்டத்(து)

எல்லியல் மதியம் அன்ன
முகத்தியர், எழிலி தோன்றச்
சொல்லிய பருவம் நோக்கும்
தோகையின், ஆடி னாரே.

[நல் இயல் — நல்ல தன்மை. மகர வீணை — மகர யாழ். வீணை
தேன் — வீணைகானம் என்ற தேன். உக — சிந்த. நகை — (இங்கே
புன்னகை. தோடு — காதில் அணியும் தோடு. வில்லிட — வில் இடுவது
போல் ஒளியிட. வாளும் வீச — வாள் வீச்சைப் போல் ஒளி வீச. வே
கிடந்தனைய — வேல் கிடந்தால் போன்ற. நாட்டம் — பார்வை. எல் —
இரவு. இயல் — இயலுகிற; அதாவது, தோன்றி விளங்குகிற. மதியம் —
சந்திரன். எழிலி — மேகம். பருவம் — பருவ காலம்; (இங்கே) கா
காலம். தோகையின் — தோகை மயில்போல.]

தோகை விரித்தாடும் மயில் போல் ஆடுகிறார்கள் பெண்கள், ராம
வில்லை முறித்த ஓசை கேட்டதும். உள்ளத்தின் உவகை புன்னகையாக
பொங்க, அந்த முகவிலாஸமும் காதிலுள்ள தோடும் கலந்து ஒடி ஒளியி
கின்றன — இன்னும் ஏதோ ஒரு வில்லை இவர்கள் மாயமாகச் சிருஷ்
டிப்பது போலே. ஒரு சமயம் அந்த ஆட்டத்திலே, அங்கு மின்கும் வா
வீசுவது போல விட்டு விட்டு வீசுகின்றன அந்த ஒளி விசேஷங்கள். அவ
களுடைய பார்வைகளிலேதான் — விழிக் கோணங்களிலிருந்துதான் —
எத்தனை வேலாயுதங்கள் புறப்படுகின்றன
கூந்தலோடு கூடிய முகம் இரவும் சந்திரனு
போல் ஒருங்கே விளங்க — என்ன ஆட்டம்
ஆஹா, என்ன கொண்டாட்டம்!



ஊடல் தீர்ந்தது — பொக்கிஷம் காலி!

வில் முறிந்த ஓசை கேட்பதற்கு முன் சில பெண்கள் கணவரோடு ஊடல் கொண்டிருந்தார்கள். சகஜம்தானே? மை தீட்டிய கண்கள் கோபத்தால் சிவந்து விட்டன குடியன் கண்களைப் போலே! கோப வெறியும் கள் வெறி போலத்தானே ஒரு வகையில்? வில் முறிந்த ஓசை கேட்டதும் அந்தக் காதலர்கள் தங்கள் கலகத்தை மறந்து விட்டார்கள். வலியப் போய் அணைந்து கொண்டார்களாம் காதலிகள் தங்கள் காதலர்களை.

இவர்கள் கோபம் தீர்ந்ததுடன், மஹாலக்ஷ்மிக்குத் தரித்திரர்கள்மீது ஏற்பட்டிருந்த கோபமும் தீர்ந்து போயிற்றாம்:

உண்நற(வு) அருந்தி னாரில்
சிவந்(து)ஒளிர் கருங்கண் மாதர்,
புண்ணுறு புலவி நீங்கக்
கொழுநரைப் புல்லிக் கொண்டார்;
வெண்ணிற மேகம் மேன்மேல்
விரிகடல் பருகு மாபோல்,
மண்ணுறு வேந்தன் செல்வம்
வறியவர் முகந்து கொண்டார்.

[உண் நறவு—உண்ணுகிற கள். அருந்தினாரில்—குடித்தவர் போல. புண்ணுறு—(மனம்) புண்பட்டுள்ள. புலவி—ஊடல். கொழுநர்—கணவர். புல்லி—தழுவி. வறியவர்—தரித்திரர்.]

அரசாங்கப் பொக்கிஷ சாலைகளெல்லாம் திறந்து வைக்கப்பட்டன, காவல் இல்லாதபடி, — கண்ட கண்ட பேர்களெல்லாம் வாரிக் கொண்டு போகும்படி. ஜனக வேந்தன் கட்டளை அது.

இந்தப் பாட்டில் கள்ளை "உண் நறவு" (உண்ணுகிற கள்) என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. குடியன் உண்ணுகிறான் கள்ளை? கள்ளே உண்ணுகிறதா குடியனை? சந்தேகந்தான். இரண்டும் இருக்கலாமே? "முதல் முதல் மனிதன் உண்ணுகிறான் கள்ளை; பிறகு கள் உண்ணுகிறது கள்ளை; முடிவில் கள் உண்ணுகிறது மனிதனை!" என்கிறதாம் ஒரு ஜப்பானியப் பழமொழி.

விண்ணும் இறங்கிவந்தது!

இந்த மகத்தான குதூகலத்திலே, ஊடல் தீர்ந்து காதலர்கள் தழுவிக் கொண்டது மட்டுமா? விண்ணும் மண்ணும் தழுவிக் கொள்ளுகின்றன!



ஐயன்வில் இறுத்த ஆற்றல்
  காணிய, அமரர் நாட்டுத்
தையலார் இழிந்து, பாரின்
  மகளிரைத் தழுவிக் கொண்டார்;
செய்கையின், வடிவின், ஆடல்
  பாடலின், தெளிதல் தேற்றார்:
மையரி நெடுங்கண் நோக்கி
  இமைத்தலும், மயங்கி நின்றார்!

[ஐயன்—ராமன். இறுத்த—முறித்த. ஆற்றல்—சக்தி. காணிய—காணும் பொருட்டு. அமரர்—தேவர். தையலார்—பெண்கள். இழிந்து—இறங்கி. பாரின்—பூலோகத்திலுள்ள. தெளிதல் தேற்றார்—(வித்தியாசம்) தெளிய முடியாதவர்களாகி. மையரி நெடுங்கண்—மை தீட்டிய, உத்தம ரேகைகள் உள்ள, நீண்ட கண்கள்.]

வில் இறுத்த விஜய சௌந்தரியத்தைக் காணும் பொருட்டு, தேவலோகத்துப் பெண்கள் இறங்கி வந்தார்களாம் பூலோகத்திற்கு. வந்தவர்கள் உவகை மிகுதியால் இந்தப் பெண்களைத் தழுவிக் கொள்ளுகிறார்கள். மண்ணுலகத்துச் சகோதரிகள் என்றா? தம்மவர்கள் என்றே தழுவிக் கொள்ளுகிறார்களாம். அழகிலும் வேறுபாடு தெரியவில்லை; செய்கையிலும் தெரியவில்லை; ஆடல் பாடல்களினாலும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியவில்லையாம். இவர்கள் கண் இமைத்ததும், "இது என்ன புதுமை யடீ!" என்று அவர்கள் மயங்கி நிற்கிறார்களாம்.

கலைகளுக்கும் வெற்றி

மிதிலாபுரிச் சங்கீதமே போதும் தேவர்களுடைய மயக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்கு. அதிலும் வில் முறிந்த குதூகலத்திலே வரும் கீதங்களல்லவா?

வயிரியர் மதுர கீதம்,
  மங்கையர் அமுத கீதம்,
செயிரியர் மகர யாழின்
  தேம்பிழி தெய்வ கீதம்,
பயிர்கிளை வேயின் கீதம்—
  என்றிவை பருகி விண்ணோர்,
உயிருடை உடப்பு மெல்லாம்
  ஓவியம் ஒப்ப நின்றார்!

[வயிரியர்—கூத்தர்; நடனம் செய்கிறவர். செயிரியர்—பாணர்; பாடும் வகுப்பினர். மகரயாழ்—மகர மீன் வடிவு கொண்ட ஒருவகை வீணை. தேம்பிழி—இனிமை பிழிகின்ற. பயிர்—இசைக்கின்ற. கிளைவேய்—ஒருவகைப் புல்லாங்குழல்.]

வில் முறித்த வெற்றி, கூத்தர்களின் நடனத்தை மிகவும் சுவாரஸ்யமாக்குவதோடு, அவர்கள் கீதத்திற்கும் விசேஷ மதுரம் தருகிறது. மங்கையரின் கீதத்தையோ அமுதமாக்கி விடுகிறது. இந்த வெற்றியால் பாணர்களின் யாழிசை தெய்வ கீதமாக உயர்ந்து விடுகிறதாம். இத்தகைய கீதங்களையும் புல்லாங்குழலின் இசை யமுதத்தையும் பருகி நின்ற தேவர்கள், எழுதி வைத்த சித்திரம் போல் அப்படியே நின்று விட்டார்களாம். வில் முறித்த காதலின் வெற்றி கலைகளுக்கும் வெற்றியாகி விட்டது; மண்ணையும் விண்ணுக்குச் சமமாக்கி விட்டது.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

66. என்ன கண்கள்! எத்தனை கண்கள்!

எவ்வளவு உவகையோடு நகரவாசிகள் வில்முறித்த வீரனை மொய்த்துக் கொண்டார்கள்! மிதிலா பட்டணத்தின் சரித்திரத்திலேயே அற்புதமான நிகழ்ச்சி யல்லவா?

இந்த விஜய செளந்தரியத்தை அனுபவிக்கும் ஆனந்தம் எப்படி யெல்லாம் வெளிப்படுகிறது பாருங்கள்!

> தயரதன் புதல்வன் என்பார்,
> தாமரைக் கண்ணன் என்பார்;
> புயல்இவன் மேனி என்பார்,
> பூவையும் பொருவும் என்பார்;
> மயல்உடைத்(து) உலகம் என்பார்,
> மானுடன் அல்லன் என்பார்;
> கயல்பொரு கடலுள் வைகும்
> கடவுளே காணும் என்பார்.

[புயல் — மேகம். பூவை — காயாம்பு என்ற ஒருவகை நீலமலர். பொருவும் — ஒத்திருக்கும். மயல் — மயக்கம். கயல் — கயல் மீன்கள் பொரு — தாக்குகிற; முட்டுகிற. வைகும் — தங்கும்.]

"தசரத ராஜகுமாரன்!" என்று மாத்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள் சிலர். வேறு வார்த்தை யொன்றும் வெளிப்படவில்லை — சொல்லத் தெரியவில்லை — அந்த உவகை வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்ட இவர்களுக்கு.

விஜயசெளந்தரியம் கண்களிலே அலையெறியக் கண்டு தாக்குண்டு, "தாமரைக் கண்ணன்" என்று மட்டும் சொல்லி அந்த வெள்ளத்திலே மூழ்கிப் போனார்கள் வேறு சிலர்.

மற்றும் சிலர், "நீலமேகம் இவன் மேனி!" என்று அந்த நீலஜோதியைக் கண்கூச அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். "ஜோதி மட்டுமா?

ஆஹா! நீலமலர்களின் மென்மையையும் பொலிவையும் அனுபவி
றோம்!'' என்று மோகித்துப் போனார் சிலர்.

“ஆஹா, என்ன மோகம்! என்ன மயக்கம்! — இந்த உலகத்திற்கு
தான்” என்றார் இன்னும் சிலர். இவர்கள் “மானுடன் அல்லன்!” என்
எண்ணினார்களாம் இவர்களில் சிலர், “கடலில் பள்ளிகொண்டிருக்கு
கடவுளே இவன்!” என்று கூடச் சொல்லி விட்டார்களாம் அந்த ஆன
அதிசயத்திலே.

* * * *

விண்ணும் மண்ணும் இப்படி ஒருங்கே மயங்கிக் கிடக்கும்போது
நகரவாசிகளில் சிலர் ராம சௌந்தரியத்தோடு சீதா சௌந்தரியத்தையு
ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். “இந்தப் புருஷோத்தமனை
காணச் சீதைக்கு இரண்டு கண் போதுமா?” என்று அதிசயித்தவர்கள்,

நம்பியைக் காண நங்கைக்(கு)
235 ஆயிரம் நயனம் வேண்டும்

[நயனம் — கண்கள்.]

என்று தீர்மானித்து விட்டார்களாம். “இரு கண்ணால் — அமையா(து
என்றார் அந்தா வானத்தவ ரெல்லாம்” என்றபடி சீதையின் அழகைப்
பார்க்க நம் இரண்டு கண்களால் முடியாது என்று குறைப்பட்டார்களா
தேவர்களும். அப்பேர்ப்பட்ட சீதையும் “நமது இரண்டு கண்களால் முடி
யாது!” என்று குறைப்படும்படி யிருக்கிறதாம் ராம சௌந்தரியம்.

* * * *

இத்தகைய கூட்டத்திலும்—இப்படி ராம சௌந்தரியத்தை ஆனந்த
பரவசமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் — அதே பேர்வழி
கள் சீதையின் சௌந்தரியத்தை ராமனு
டைய பேரழகிற்கும் மேலாக மதிப்பது இன்
னும் அதிசயமல்லவா?

நம்பியைக் காண நங்கைக்(கு)
ஆயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும்
குரிசிற்கும் அன்ன தேயாம்;



[கொம்பு—பூங்கொம்பு போன்ற சீதை. காணுந்தோறும் — காணும் போதெல்லாம். குரிசில் — ராமன். அன்னதே — அத்தன்மையதே.]

"நம்பியைக் காணும் நங்கைக்கு அக் காட்சி இரு கண்ணால் அமையாது; அவளுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும்!" என்று துணிந்து கூறிய மிதிலை மக்கள், "நங்கையைக் காணுந்தோறும் காணுந்தோறும் (பார்க்கும் போதெல்லாம்) இந்த அழகனுக்கும் ஆயிரம் ஆயிரம் கண்கள் புதிது புதிதாக வேண்டும்!" என்று பின்னும் எவ்வளவோ துணிவுடன் சித்தாந்தம் செய்து விடுகிறார்களாம். சீதையின் அழகு ராமனது அழகையும் வென்று விடுகிறது என்பது குறிப்பு.

12

* * *

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, சிலர் லக்ஷ்மணனைப் பார்த்து, அவனைத் தங்கள் நண்பர்களுக்குச் சுட்டி காட்டி, 'தம்பியைக் காணீர்!' என்கிறார்கள். ராமன் தம்பி அல்லவா? லக்ஷ்மணனுடைய லக்ஷணந்தான் கொஞ்சமா? லக்ஷ்மணன் மேனியிலும் ராம சௌந்தரியம் கொஞ்சிக் குலாவுவது கண்டு, "அந்த அழகையே இங்கும் வைத்து வனைந்திருக்கிறது! ஒரே அச்சில் வார்த்த உருவங்கள்!" என்று சொல்லிச் சொல்லித் திருப்தி அடைகிறார்கள்.

இந்த நிலையில், "ஆ, ஆ! என்ன பாக்கியம் — என்ன தவம் — செய்துவிட்டது இந்த உலகம், இப்பேர்ப்பட்டவர்களைக் கண் படைத்த பயனாகக் கண்டு மகிழ்வதற்கு!" என்று சிலர் பாவசமானார்கள்.

'தம்பியைக் காணீர்!' என்பார்;
'தவம்உடைத்(து) உலகம்' என்பார்

170

என்றெல்லாம் மகிழ்ந்து கொண்டிருக்கும் போதே சிலர், "இந்த ராஜகுமாரர்களை இந்த நகரத்துக்கு அழைத்துக் கொண்டு வந்த முனிவனுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்; அவன் காலுக்குக் கும்பிடு போடுவோம்!" என்று போய் விசுவாமித்திரன் காலிலே விழுகிறார்களாம்.

உணர்ச்சியின் சிகரத்தை அடைந்து சௌந்தரியத்தின் பரிபூரண லக்ஷ்யத்தை எட்டிப்பிடிக்க முயன்றவர்கள் படும் பாடு இது! — என்று, மனஸ் தத்தவ ரீதிக்கு எவ்வளவு பொருத்தமாய்க் கவிஞன் கட்டத்தை முடிக்கிறான் பாருங்கள்.

* * *

இப்படிப்பட்ட உணர்ச்சிப் பெருக்கிலும் சீதையின் அழகு ராமன் அழகையும் வென்று விடுகிறது என்று குறிப்பிடுவது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. இத்தகைய அழகுமீது ராமன் கொண்ட காதல், வில்லை முறித்து வெற்றி பெற்றதற்கு முக்கிய காரணம் என்று ஊகித்தல் கூடும்.

வால்மீகி ராமாயணத்தில் வில் முறித்த வெற்றி ராமனது வீரத் தோள்களின் வெற்றி. கம்ப சித்திரத்திலோ இது காதலின் வெற்றி — வீரத்திற்கு உள்ளுறை உயிராக ராமன் சீதைமீது கொண்ட காதலின் வெற்றி.

ஜூலியஸ் ஸீஸர் என்ற ரோமாபுரி வீரன் ஒரு சமயம் தான் அடைந்த வெற்றியை "வந்தேன், கண்டேன், வென்றேன்!" என்ற மூன்றே வார்த்தைகளில் கூறி முடித்தானும். அதே மூன்று வார்த்தைளில் கம்பன் தன் காவிய நாயகனுடைய வில் முறித்த வெற்றியையும் சுருக்கச் சொல்லி விளங்க வைத்துவிட முடியும். "வந்தான், கண்டான், வென்றான்!" என்ற மூன்றே வார்த்தைகளில். ஆம் — ராமன் வந்தான், சீதையைக் கண்டான், வில்லை முறித்தான்! — இது கம்ப சித்திரம்!

சீதா ராமர்களின் திருமணத்திற்கு முன், அவர்கள் சந்தித்துக் காதலித்தார்கள் என்ற கதையைத் திருமங்கையாழ்வார் கப்பனுக்கு முன்பே குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இது தமிழ் நாட்டிலே பழந் தமிழ் மரபிற்குப் பொருத்தமாக வழங்கி வந்த ஒரு கதைத் துணுக்கு என்று ஊகிக்கலாம்.

இந்த மரபை ஒட்டிக் கம்பன் தன் மேதாவிலாசத்தால் இதை விரிவாக்கி, ராமாயணத்தையே காதலின் வெற்றியாக நிர்மாணம் செய்திருக்கிறான் என்று கருதலாம்.

* * *

236 தயரதன் புதல்வன் என்பார்;
தாமரைக் கண்ணன் என்பார்

என்றபடி பட்டணத்து ஜனங்கள் உருகிக் கொண்டிருக்கும் போதே, சீதையும் உருகிக் கொண்டிருக்கிறாள் அந்தத் தாமரைக் கண்களை நினைத்து நினைத்து. ஆம், அந்த ஆனந்தமான காலை வேளையிலே, உதய சூரியனை நோக்கி மலரும் செந்தாமரைப் பூவைப் பார்த்ததும், தன்னை நோக்கி மலர்ந்த அந்தத் தாமரைக் கண்கள் அவளை என்ன பாடு படுத்தியிருக்கவேண்டும்! அந்த நெஞ்சை எப்படி யெல்லாம் துருவித் துருவிப் பார்த்திருக்கவேண்டும்!



த்ர ராமாயணம்

பி. ஸ்ரீ.

67. தாமரையும், தாமரைக் கண்ணனும்

" இந்த இரவையும் இந்தச் சந்திரனையும் — ஐயோ! — எப்படித்
ன் தப்பிப் பிழைக்கப் போகிறேனோ?" என்றிருந்த சீதைக்கு, அந்த
ட இரவும் அந்தச் சீறும் அம்புலியும் எப்படியோ போய் விட்டன என்
், அது ஆச்சரியமாகத் தோன்றி யிருக்க வேண்டும்!

ஆனால் தான் தப்பிப் பிழைத்ததில் ஆச்சரியமும் இல்லையென்று
ான்றுகிறது. தன் உள்ளம் திருடிய அந்தக் கள்வனை இன்னும் காண
டியாதா?—என்ற ஆசைதான், ஆசை-நோய்க்கும் மருந்தாகி விட்டது!

ராஜ சபையில் வில் முறிந்த இடி முழக்கங்கூடச் சீதையின் காதில்
வில்லை. இதுவும் காதல்-நோயின் ஆச்சரியங்களில் ஒன்று.

சீதையைப் போல் ராமனும் இரவு முழுதும் கண் உறங்கவில்லை தான்.
லையும் இருளும் நீங்கிச் சந்திரோதயம் ஆகும்வரை ராமன் விச்வாமித்
ன் முதலானவர்களோடு இருந்துவிட்டான். எனவே, ராமன் நிலவுத்
ன்பத்தை மட்டும் அதிகமாக உணர்ந்து நொந்ததாகக் கவி வர்ணிக்கி
ன். சீதைக்கோ மாலை, இருள், நிலவு ஆகிய மூன்றும் ஒரே நோவுதான்.

* * * *

மாலை தொடங்கி உடம்பை விட்டு நீங்கிக் கொண்டிருந்த உயிரை
வு நீங்கியதும், சிறிது மீட்டுக்கொண்ட சீதை, படுக்கையை விட்டு எழுந்
ள். பாங்கியர் சூழப் போய்க் கன்னியா மாடத்தின் அருகேயிருந்த ஒரு
மரைத் தடாகத்தை அடைந்தாள். அங்கே சிறிது இளைப்பாறலாம் என்று
ணம். தடாகக் கரையில் ஒரு பளிங்கு - மாடம். அதிலே ஒரு பூம்
க்கை. எவ்வளவு பிரயாசத்தோடு அங்கே போய் உட்கார்ந்து கொள்
றாள்? ஊஞ்சலாடுவது போல் வருவதும் போவதுமாயிருந்த உயிரோடு,
தப் படுக்கையிலிருந்து அந்தப் படுக்கைக்கு ஆடி அசைந்து தள்ளாடித்
மாறிப் போனதே ஒரு யாத்திரையாகி விட்டது:

ஊசலா(டு) உயிரி ஞேடும்,
　　உருகுபூம் பள்ளி நீங்கிப்,
பாசிழை மகளிர் சூழப்
　　போய்,ஒரு பளிக்கு மாடக்
காசில்தா மரையின் பொய்கைச்
　　சந்திர காந்தம் ஈன்ற
சீதநீர் தெளித்த மென்பூஞ்
　　சேக்கையை அரிதில் சேர்ந்தாள்.

[ஊசல் — ஊஞ்சல். உருகு பூம்பள்ளி — (விரக தாபத்தால் சி
உருகிக் கிடந்த மலர்ப் படுக்கை. பாசிழை — பசும் பொன் ஆபரண
பளிக்கு மாடம்—பளிங்கு மாடம். காசில்—குற்றமில்லாத. பொய்
தடாகம். சந்திரகாந்தம் — சந்திரிகையில் நீர் உமிழ்வதாகக் கருதப்
மிகவும் குளிர்ந்த சந்திரகாந்தக் கல். ஈன்ற—வெளியே உமிழ்ந்த. சீத
குளிர்ச்சி. சேக்கை—படுக்கை. அரிதில்—வெகு கஷ்டத்தோடு.]

*　　*　　*　　*

பொய்கையில் செந்தாமரைகள் இதழ் விரித்து மலர்ந்து கொ
ருக்கின்றன, — பொன் மயமான காலைக் கதிர்களுக்கிடையே. எ
ஆவலோடு சீதை பார்க்கிறாள்! ஏன்? அந்தப் பூக்களோடு பே
தொடங்கி விட்டாளே:

‘பெண்இவள் உற்ற(து)’ என்னும்
　　பெருமையால், அருமை யான
வண்ணமும் இலைக ளாலே
　　காட்டலால், வாட்டம் தீர்ந்தேன்!
தண்ணறுங் கமலங் காள்!என்
　　தளிர்நிறம் உண்ட கண்ணன்
உள்நிறம் காட்டி, நீர்என்
　　உயிர்தர உலோவி னீரே!

[உற்றது — வந்தடைந்தது. பெருமை — (இங்கே) பெருந்தன்
பெரியாரது தன்மை. வண்ணம் — நிறம். தண் நறும் கமலங்கா
குளிர்ந்த, மணமுள்ள, தாமரைகளே! — உள் நிறம் — உள்ள
தன்மை. உலோவினீர் — உலோபம் செய்தீர்.]

“தாமரைகளே! நீங்கள் பெரியவர்கள்; பெண்ணுக்குப் பெ
கொடுத்த உங்களிடத்தில் பெருந் தன்மை இருக்கிறது! ‘இங்கே
ருக்கிறாளே, இவள் பெண் அல்லவா?’ என்று இரக்கப்படுகிறீர்கள்!”
கிறாள். ‘பெண் என்றால் பேயும் இரங்கும்!’ பூவும் இரங்குவதில் அ
தான் என்ன? அதிலும், பெருமை வாய்ந்த தாமரைப்பூ அல்லவா? —
பது பாவம்.

அந்தச் செந்தாமரைப் பூவை நோக்கிய கண்கள் பூவைச் சூழ்ந்திரு
தாமரை - இலைகளையும் நோக்குகின்றன. அருமையான பச்சையிலைக
மேற்புறம் காலை இளவெயிலில் கண்ணாடிபோல் ‘தகதக’ வெ
பிரகாசிக்கின்றன. நடுநாயகமான பூவின் சிவப்புப் பட இலையின் ப
இந்திர நீலமாய்க் காண்கிறது. அந்தத் திருமேனியின் அருமையால
ஜோதியின் நினைவு வருகிறது, “வாட்டம் தீர்ந்தேன்” என்று நன்றி
வித்துக் கொள்கிறாள், பூவை நோக்கி.

எனினும், அதே தாமரைப் பூவை மறுபடியும் நோக்கி, "நீங்கள் …ல்களில்லை, லோபிகள் தான்!" என்று குற்றமும் சாட்டுகிறாள். வெளி…தைக் காட்டியவர்கள் 'உன் நிறம்' (ராமனுடைய உள்ளத்தின் …க்கியதை) 'இது தான்!' என்றும் காட்டிவிட வில்லையாம். "அதற்கு …பம் செய்தீர்களே! உன் நிறம் காட்டினால் அல்லவா எனக்கு உயிர் தர…யும்?" என்று தாமரை மலர்களை நொந்து குறை கூறுகிறாள்.

மேனி - அழகுக்கு ஒப்பான இலைகளையும், கண் - அழகுக்கு ஒப்…ன தாமரை மலர்களையும் கண்டு சிறிது ஆறி யிருந்தவள், "ஐயோ! என் …ம்பு இப்படி நிறங்குன்றிப் பசலை போர்க்கும்படி செய்துவிட்டுப் போன …தக் கண்ணனுடைய உள்ளமும் கண்போல், மேனி போல், அழகு வாய்க்தது தானா? அந்த நெஞ்சில் ஈரம் இருக்கிறதா, இரக்கம் இருக்கிறதா? அன்பு இருக்கிறதா?" என்றெல்லாம் அறியத் தவிக்கிறாள், துடிக்கிறாள்.

"சிறிது அருள் செய்த பெரியவர்கள் முழுதும் அருள் செய்ய வில்லையே? உள்ளத்தின் அழகையும் காட்டி உயிர்தராமல் ஏனிப்படி லோபிகளாக வேணும்?" என்று புலம்புகிறாள்.

"என் உயிர் தர உலோவினீரே!" என்று புலம்புவதால்,



இவள் உயிர் இப்போது இவள் வசமாக இல்லையென்பது தெளிவு. மேனிக்கு ஒப்பாக இருக்கும் இலைகளும் மலர்களும் அளிக்கும் ஆ— போதவே போதாது என்பதும் தெளிவாகி விட்டது. இந்தப் பே— பொருள்கள் அல்ல, இவளுக்கு உயிர் தரும் பொருள்கள்!

இந்த நிலையில் தாமரையையும் தடாகத்தையும் மறந்து தன் முன்னே வந்துபோன கண்ணனைப் பார்க்கிறாள் மனக் கண் மு— ஆம், வில்லும் தோளுமாகப் பார்த்து விடுகிறாள்.

> நாணுலாவு மேருவோடு
> நாணுலாவு பாணியும்,
> தூணுலாவு தோளும், வாளி
> ஊடுலாவு தூணியும்,
> வாள்நிலாவின் நூல்உலாவு
> மாலைமார்பும், மீளவும்
> காணலாகும் ஆகின், ஆவி
> காணலாகு மேகொலாம்!

[நாண் —' வில் நாண். மேரு — (இங்கே) மேரு மலைபோல் தே— றும் பெரிய, வலிய, வில். பாணி — கை. வாளி — அம்பு. ஊடு — உள்— தூணி — அம்பறாத் தூணி; அம்புக் கூடு. வாள் நிலாவின் — பொருந்திய நிலாவைப் போன்ற. நூல் — பூணூல்.]

ராமன் உலாவும்போது அவனோடு உலாவுகின்றனவாம், ஆச்சரியம— அந்த வில்—நாண்—பூணூல் முதலியன்வெல்லாம். அந்த அழகிற்கே உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள். மலைபோன்ற அந்த வில்லை— நாணில் உலாவிக் கொண்டிருந்த அந்தக் கையையும், தூண்போல் திர— விய தோள்களையும், அம்பறாத் தூணியையும், பூணூலும் மாலையும் ளும் அந்த மார்பையும் இப்போது நிஜமாகக் காணவில்லையே!— என்— தவிக்கிறது உள்ளம். "அவை — லாம் அப்படியே நேற்றுக் கண்ட— போல் மீளவும் காணக் கிடை— குமா? அப்படியானால் தான் — உயிரையும் காணலாகும் இந்த உ— பிலே!" என்று பொருமுகி— ஹிருதயம்.

* * *

மன்மதன் அம்பு போடுகிறா— ஆம், கொடிய அம்புகளை இரக்க — லாமலே! எனினும் உலர்விச் — லும் கோதண்டபாணி—அந்த — லும் தோளுக்குச் சுமைதானா? ஆபத்தில் இருக்கும் ஒரு பெண்— 'அஞ்சாதே' என்று 'அபயம்கொ— துக் காப்பாற்ற வரவில்லையே— தாமரைக்குள்ள இரக்கம்கூடத் — ரைக் கண்ணனுக்கு இல்லையா



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

68. எட்டாத பொருள் கிட்ட வந்து........

நீண்ட கொடிய அம்புகள் பஞ்சிலே விழும் நெருப்பைப் போல் நெஞ்சிலே வந்து விழுகின்றனவாம். "அந்த அம்புகள் என் உயிரைப் பற்றிக் கொண்டு ஓடுகின்றனவே!" என்கிறாள் சீதை:

> பஞ்சரங்கு தீயின்ஆவி
> பற்றிஓடு கொற்றவார்
> வெஞ்சரங்கள் நெஞ்சரங்க,
> வெய்யகாமன் எய்யவே,
> சஞ்சலம் கலந்தபோது
> தையலாரை உய்யவந்(து),
> "அஞ்சல்! அஞ்சல்!" என்கிலாத
> ஆண்மைஎன்ன ஆண்மையே?

[பஞ்சு அரங்கு — பஞ்சை அழிக்கிற. தீயின் — தீயைப்போல. கொற்றம் — வெற்றி. வார் — நீண்ட. வெஞ்சரங்கள் — கொடிய அம்புகள். நெஞ்சு அரங்க — நெஞ்சு அழியும்படி. வெய்ய காமன் — கொடிய மன்மதன். தையலார் — பெண்கள். அஞ்சல் — அஞ்சாதே.]

என்ன கதறல்! ஆ, என்ன கேள்வி! விரக தாபத்தில் வெந்து கொண்டிருக்கும் நெஞ்சு கேட்கும் கேள்வியல்லவா? ராம வீரத்தைப் பழிப்பது போல வெளிப்படுகிறது நெஞ்சுக் கொதிப்பு.

'தையலார்' என்று பொதுவாக ஸ்திரீ ஜாதியைக் குறிப்பது போலச் சீதை அந்த ஜாதிப் பன்மையால் தன்னையே குறிப்பிடுவது, இக்காதலியின் 'குழந்தை யுள்ள'த்தைக் காட்டுகிறது.

* * *

"மன்மத பாணமா?" "ஆம், அந்த மேகம்தான் என் உயிரை முகந்து பருகிவிட்டது, தன் இரண்டு கண்களாலும்!" என்று கதறுகிறாள். ஆஹா, என்ன அதிசயமான மேகம்!

விண்தலம் கலந்திலங்கு
திங்களோடும், மீதுசூழ்
வண்டலம்(பு) அலங்கல்தங்கு
பங்கியோடும், வார்சிலைக்
கொண்டல்ஒன்(று) இரண்டுகண்ணின்
241 மொண்டுகொண்(டு) என் ஆவியை
உண்ட்துண்(டு): என் நெஞ்சின் இன்றும்
உண்(டு), அ(து) என்றும் உண்டரோ !

[விண்தலம் — வானம். திங்கள்—சந்திரன். வண்டு அலம்பு —
வண்டுகள் ரீங்காரம் செய்கிற. அலங்கல் — பூமாலை. பங்கி — கூந்தல்
முடி. வார் — நீண்ட. சிலை —வில். கொண்டல் —மேகம்.]

வானத்திலிருந்து சந்திரனோடும் வான வில்லோடும் இறங்கி வந்தது
போலத் தோன்றியதாம் அந்த நீலமேகம். ஆ, எப்பேர்ப்பட்ட சந்திரன்!

அழகிய கூந்தல் போல் முடிந்திருந்த சிகையோடு கூடிய சந்திரன்! முடியைச் சுற்றிப் பூமாலை. பூமாலையைச் சுற்றி வண்டுகளும் ரீங்காரமும்.

கன்னிமாடத்தின் மேலிருந்து தான் முதல் முதல் பார்த்தபோது தோன்றிய முறைப்படியே ஞாபகப்



த்திக் கொள்கிறாள்,—அந்தப் பூச்சூட்டிய தலையையும், அதன்கீழ் முக திரளையும், அப்பால் வில்லையும்.

"இப்போதும், என் நெஞ்சில் இருக்கிறது. இங்கே இன்றும் உண்டு, என்றும் உண்டு!" என்பது காதலியின் சித்தாந்தம். மறக்கவே முடியவில்லை என்று அலறுகிறாள். இந்த அலறலை அப்படியே நம் காதில் கொண்டு வந்து போடுகிறது 'அரோ' என்ற முடியும் அசைச்சொல்.

நெஞ்சுக்குள் மட்டுமா? தன் கண்ணுக்குள்ளும் அந்த நீலமேகம் ஒளிந்திருப்பதாகத் தோன்றுகிறது.

விண்ணுளே எழுந்தமேகம்,
  மார்பில் நூலின் மின்னொ(டு),இம்
மண்ணுளே இழிந்ததென்ன,
  வந்துபோன மைந்தனார்,
எண்ணுளே இருந்தபோதும்
  யாவரென்று தேர்கிலேன்;
கண்ணுளே இருந்தபோதும்
  என்கொல்காண்கி லாதவே?



[நூலின் மின் — பூணூலாகிய மின்னல். இழிந்தது—இறங்கியது. மைந்தனார்—(இங்கே) ராஜகுமாரர். தேர்கிலேன் — ஆராய்ந்து அறிந்தேனில்லை. என்கொல் — யாதோ.]

தான் விரும்பிய பொருள் மறுபடியும் எட்டாத தூரத்திற்குப் போய் விட்டது போலத் தோன்றுகிறது. அந்த மேகம் மின்னலையே பூணூலாகப் பூண்டு இந்த மண்ணிலே இறங்கி வந்து போயிற்று! — என்று எவ்வளவு வசீகரமாய்க் குறிப்பிடுகிறாள்! "எட்டாத பொருள் கிட்ட வந்து மறைந்து போய்விட்டதே!" என்று தவிக்கிறது ஹிருதயம்.

"அப்படி மறைந்து போனவர் என்னுடைய எண்ணத்துக்குள்ளேயே போய்விட்டார்; ஆம், இங்கே தான் இருக்கிறார்!" என்கிறாள். எண்ணத்துக்குள்ளே இருந்த போதிலும் இன்னாரென்று தெரிந்து கொள்ள முடியவில்லையாம். "என் கண்ணுக்குள்ளே தான் இருக்கிறார்; எனினும் கண்டு கொள்ள முடியவில்லையே!" என்று பரிதவிக்கிறாள்.

என்ன ஆச்சரியம்: இடத்தால் தூரமான பொருள்களைக் காணக் கூடிய கண் தன்னுள்ளே யிருப்பவரைக் காண முடியவில்லை! என்ன மாயம்! காலத்தால் தூரமான பொருள்களை அறியக்கூடிய எண்ணமும் தன்னுள்ளே யிருப்பவரை அறிந்து கொள்ள முடியவில்லையே!

இப்படியெல்லாம் தனக்குள் தானே ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாலும், காதலின் வேகத்தைக் குறைக்கத்தான் முடிகிறதா? அலையை

உடைக்கும் வெள்ளமாகி விட்டது காதல். சீதையா இப்படியெல்லா
சொல்லிக் கொள்கிறான்? ஆம், காதல் - பைத்தியத்தின் முதிர்
நிலை! என்ன என்னவோ கதை — என்ன என்னவோ கனவு — தோன்
கிறது சீதையின் உள்ளத்திலே! பால் - கடலிலே அமிர்தம் பிறந்த க
வருகிறது ஞாபகத்திற்கு. ஏன்? அந்தக் கடலிலே பிறந்த அமிர்தம், அ
வைத்திருக்கும் அழகான தங்கப் பாத்திரத்தோடு தோன்றுகிறது க
முன்பு. ஆனால் கண்ணில் பட்ட தேவாமிர்தம் கைக்கு எட்டாமல் போ
விடுகிறது: என்ன பைத்தியக்காரத்தனம்!

அமிர்தமும் போய்ப் பாத்திரமும் போய் விட்டதாம். அப்படிக்
விட்ட புத்திசாலிதான் யார்? தன் மனக் கண்ணாடியில் தன்னையேதா
பார்த்துக் கொள்ளுகிறான் சீதை:

பெய்கடல் பிறந்(து)அயல்
பிறக்கொணு மருந்துபெற்(று),
ஐய! பொற் கலத்தொ(டு)அங்கை
243 விட்டிருந்த ஆதர்போல்,
மொய்கிடக்கும் அண்ணல்தோள்
முயங்கிடாது, முன்னமே
கைகடக்க விட்டிருந்து.
கட்டுரைப்ப தென்கொலோ?

[பெய் — பெய்துவைத்த. பிறக்கொணு — பிறக்க முடியாத
மருந்து — (இங்கே) அமிர்தம். ஐய — அதிசயக் குறிப்பு. அங்கை —
அழகிய கை. ஆதர் — மூடர். மொய் — வலிமை. அண்ணல் — (இங்கே
ராமன். முயங்கிடாது — தழுவிக் கொள்ளாமல். கட்டுரைப்பது —
(இங்கே) அலங்காரமாகச் சொல்வது.]

“கண்ணால் நுகரும் அமிர்தமல்லவா காணக் கிடைத்தது அந்த
திருமேனியில்?” என்று எண்ணுகிறான். அந்த வீரத்தோள்களைக் கா
பெற்றும் அப்படியே தழுவிக் கொள்ளாமல் — கை கடந்து போகும்ப
விட்டுவிட்டு, இப்போது பல வார்த்தைகளை அலங்காரமாக அடுக்கி அடுக்
பேசிக் கொண்டிருப்பதில் என்ன பயன்?

இப்படி யெல்லாம் கரைகாணுத துன்ப வெள்ளத்திலே சீதை ஆழ்
கொண்டிருக்கும் போது மலை போன்ற சிவதனுசு முறிந்து விட்டது. இ
படித் தன்னை மறந்திருந்ததால்தான் அந்த இடிபோன்ற சத்தமும் இவளு
குக் கேட்கவில்லை....சரி: அதோ என்ன, மின்னல் பாய்வது போலே
என்ன ஆத்திரம்! ஏன் அப்படி ஓடி வருகிறான்? யார் அவன்?



சுந்தர ராமாயணம்

பி. ஸ்ரீ.

69. என்ன குதூகலம்! என்ன குறும்பு!

சீதை, உள்ளம் நைந்து நைந்து விம்மி விம்மி இரங்கி ஏங்கிக் கொண்டிருக்கும்போது, — அது என்ன, மின் வெட்டுவது போல் ஒரு தோற்றம்?

வில் முறிந்த அதிசயத்தை நேரில் கண்ட பெண்மணிகளில் ஒருத்திக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அந்தச் செய்தி-மூட்டையிலிருந்து அப்படியே எடுத்து எடுத்துக் காட்ட வேணும் நம் தோழிக்கு, ஜாலவித்தை காட்டுவது போலே! — என்று ஆசை. அந்த நிகழ்ச்சியைப் பருகிக் குளிர்ந்து போன உள்ளம்தான் அப்படி ஒரு அதிசயமான சந்திர பிம்ப மாக்கி விட்டது அந்த முகத்தை! ஆம், ஆனந்த அலைகடலிலே உதயமாகும் சந்திரபிம்பம் போலே!

* * *

கழுத்திலே கிடக்கும் ரத்தினமாலைகளும் காதணிகளும் வானவில் வீச, மின்னலைப் போலப் பாய்ந்து வருகிறாளே, இவளுக்கு நீலமாலை என்று பெயர். என்ன வசீகரமான தோற்றம்! என்ன வசீகரமான பெயர்!

அவிழ்ந்த கூந்தலை எடுத்துக் கட்டிக் கொள்ளவும் நேரமில்லை; குலைந்த ஆடையைச் சேர்க்கிக் கொள்ளவும் தோன்றவில்லை. பூமாலையும் கூந்தலும் சித்திரப் பூம்பட்டாடையும் சேர்ந்து தொடர,.........ஆஹா, அந்தக் கண்கள்தான் எப்படி விரிந்து வசீகரமாக, மலர்ந்திருக்கின்றன! உள்ளத்திலே பெருகிக் கொண்டிருக்கும் உவகை-வெள்ளம் தான் இப்படி அணைகடந்து பொங்கி வருகிறது!

இவள் யார்? வேறு யாரா யிருக்க முடியும்? சீதையின் தோழிகளில் ஒருத்திதான். அருமைத் தோழிகளிலும் அருமைத் தோழியாகவே இருக்க வேண்டும்:

வடங்களும் குழைகளும்
வான வில்லிட,
தொடர்ந்தபூங் கலைகளும்
குழலும் சோர்தர,

நுடங்கிய மின்என
நொய்தின் எய்தினள்,
244 நெடுந்தடம் கிடந்தகண்
நீல மாலையே.

[வடங்கள் — ரத்தின வடங்கள்; பொன்னாரங்கள். குழைகள் — காதணிகள். பூங்கலை — அழகிய புடவை; சித்திரப் பூம்பட்டு. குழல்— கூந்தல். சோர்தர — சோர்ந்து சரிய. நுடங்கிய—தள்ளாடிய. நொ தின் — விரைவாக. தடம் — அகலம்; தடாகம்.]

சீதை கைகடந்து போகும்படி விட்டு விட்டதாக எண்ணினளே, அ அமிர்த கலசம் கைவசமாகி விட்டதென்று சொல்லிக்கொண்டே வரு இந்தக் கண்களை, "நெடுந்தடங் கிடந்த கண்" என்று அப்படியே நமக்கு காட்டி விடுகிறான் கவிஞன்.

* * * *

வந்த தோழி வழக்கம்போல் சீதையை வணங்கி நடந்ததைச் சொல் கிறாளா? அதுதான் இல்லை:



வந்தடி வணங்கிலள்,
வழங்கும் ஓசையள்,
அந்தமில் உவகையள்,
ஆடிப் பாடினள்;
245 "சிந்தையுள் மகிழ்ச்சியும்,
புகுந்த செய்கையும்,
சுந்தரி! சொல்" எனத்
தொழுது சொல்லுவாள்.

[வணங்கிலள் — வணங்கினளில் அந்தமில்—எல்லையற்ற.]

'வணக்கமு மில்லை, ஒடுக்க மில்லை' என்று சொல்லும்படி வி மாக நடந்து கொள்ளுகிறாள் தோ ஆர்ப்பாட்டம் செய்கிறாள், 'இன்ன செய்கிறோம்' என்று தெரியாமலே. ஆ கிறாள், பாடுகிறாள், வந்த காரியத்தை மறந்து. "சுந்தரி!" என்று அ தோழிப் பெண்ணை அருமையாக அ த்து, "இவ்வளவு மகிழ்ச்சிக்குக் கார மென்னடீ? அப்படியென்ன நடந் விட்டது, சொல்லு?" என்று கேட் றாள் சீதை.

அப்போதுதான் நீலமாலைக்கு நினை வருகிறது, உணர்ச்சி தெளிகிற உடனே தலைவியை வணங்குகிறா (சீதைக்கு இப்போது இந்த மரியா தேவையில்லை. செய்தி - மூட்டை திறந்து விட்டால் போதும்!) சரி, தோ வார்த்தை சொல்லவும் ஆரம்பிக்கிறாள்.

ஆனால் வில் முறிந்த செய்தியைப் பளிச்சென்று நேராகச் சொல்லி விடலாகாதா? அப்படிச் சொல்லிவிடாமல், எங்கேயோ சுற்றி எவ்வளவோ அவகாசமாக வம்பளப்பது போல், ஏதோ "யானை, இரதம், குதிரை" என்று ஆரம்பிக்கிறாள்.

இப்பேர்ப்பட்ட சேனைகளைக் கடலாக உடையவன் என்கிறாள். யார் அந்த அரசன்? கல்விக் கடலாகவும் இருப்பவன் என்கிறாள். பிறகு பெயர் 'தசரதன்' என்கிறாள். 'தசரத சக்ரவர்த்தி' என்று ஒரே வார்த்தையில் சொன்னால் போதாதா? 'அவன் ஒப்பற்ற செங்கோல் செலுத்தும் சக்ரவர்த்தி'—என்கிறாள். இவள் சொல்லித்தானா இதெல்லாம் தெரியவேணும்? "அந்தச் சக்ரவர்த்தி மழை போல் வழங்கும் வள்ளல்" என்றும் சொல்லுகிறாள். என்ன கதை-வளர்ப்பு! என்ன குறும்பு!

தசரதனை இவ்வளவு தூரம் வர்ணித்த பின்புதான், அவன் புதல்வனைக் குறித்துப் பிரஸ்தாபம். அந்தப் புதல்வனுடைய வடிவழகைக் குறித்துத் தான் முதல் முதல் பேசுகிறாள். அந்தத் தசரத புத்திரன் மன்மதனையும் வென்ற கட்டழகன் என்கிறாள். ஆனால் அந்த வில்?

இப்படி ஒரு நெடுங்கதை சொல்வது போல் நீலமாலை பேசுவதைக் கேளுங்கள்:

> கயரத துரகமாக்
> கடலன், கல்வியன்,
> தயரதன் எனும் பெயர்த்
> தனிச்செல் நேமியான்,
> புயல்பொழி தடக்கையான்-
> புதல்வன், பூங்கணை
> மயல்விளை மதனற்கும்
> வடிவு மேன்மையான்.



[கயம் — யானை. துரகம் — குதிரை. மாக்கடலன் — பெரிய கடல் போன்ற சேனையை உடையவன். தனிச்செல் நேமியான் — தனிச் செங்கோல் செலுத்துகிற சக்ரவர்த்தி; ஏக சக்ராதிபதி. நேமி — சக்கரம்: ஆட்சியின் அறிகுறி. புயல் — மேகம். தடக்கை — பெரிய கை. பூங்கணை— புஷ்ப பாணங்கள். மயல் விளை—மயக்கம் விளைவிக்கிற. மதனற்கும்— மன்மதனைக் காட்டிலும்.]

பிறகுதான் வீர ஸௌந்தரியத்தை — அந்த வில்முறித்த வீரத் தோள்களை — வர்ணிக்கிறாள்; பெயர் முதலிய விவரங்களையும் தெரிவிக்கிறாள்:

மராமரம் இவையென
வளர்ந்த தோளினன்,
அராவணை அமலன்என்(று)
அயிர்க்கும் ஆற்றலான்,
இராமன்என் பதுபெயர்;
247 இளைய கோவொடும்
பராவரும் முனியொடும்
பதிவந்(து) எய்தினன்.

[மராமரம் — ஒருவகை மரம். அராஅணை அமலன் — மஹாவிஷ்ணு. அயிர்க்கும் — சந்தேகிக்கிற. ஆற்றலான் — சக்தியோடு கூடியவன். இளைய கோ — தம்பியாகிய லக்ஷ்மணன். பராவரும் முனி — யாவராலும் துதிக்கப்படுகிற விச்வாமித்திரன். பதி — (இங்கே) மிதிலாப்பட்டணம்.] ஆனால் வில்லைக் குறித்து இன்னும் ஒன்றும் சொல்லவில்லை!

தோழி, இப்போதுதான், "அந்தத் தசரதராஜகுமாரன் சிவதனுசைக் காணும் பொருட்டு வந்தான்" என்கிறாள். அவன் வில்லை வளைக்க வந்ததாகவே கருதும் இவள், அவன் நாணேற்றிய செய்தியையும் தெரிவிக்கிறாள்:

பூண்இயல் மொய்ம்பினன்,
"புனிதன் எய்தவில்
காணிய வந்தனன்"
என்னக், காவலன்
248 ஆணையின் அடைந்தவில்
அதனை, ஆண்தகை
நாண்இனி(து) ஏற்றினன்;
நடுங்கிற்(று) உம்பரே!

[பூண் — அணி; (இங்கே) வீரர்களின் அணிகளான தோள்வளை முதலிய ஆபரணங்கள்; உடல் - உறுப்புகளின் சக்தியைக் காட்டும் ஆபரணங்கள். மொய்ம்பு — சக்தி. புனிதன் — (இங்கே) சிவபெருமான். காணிய — காணும் பொருட்டு. காவலன் — (இங்கே) ஜனக மன்னன். ஆண்தகை — ஆண்மைக்குணமுள்ள ராமன். உம்பர் — மேலுலகம்.]

சுற்றிச் சுழற்றிக் கதை வளர்த்துத் தலைவியின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டு, முடிவில் எவ்வளவு குதூகலமாக ராமன் நாணேற்றியதைச் சொல்லுகிறாள்! ஒருவராலும் வளைக்க முடியாத சிவதனுசு பூமழைக்கும் புகழ் மழைக்குமிடையே முறிந்து விழுந்ததென்று கதையை முடிக்கப்போகிறாள்.

* * * *

சீதையின் நிலை இப்படியாக, ஜனகன் விச்வாமித்திரனை அணுகி வணங்கினான்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

70. சந்தேகமும், சந்தோஷ வெறியும்

சீதையிடம் முதல் முதல் சுற்றிச் சுற்றிப் பேசிக்கொண்டு வந்த தோழி, வில்லை வளைத்து ராமன் நாணேற்றிய காரியம் முதலியவைகளைத் துரிதமாகச் சொல்லுகிறாள்.

நாண் இனி(து) ஏற்றினான்

என்று சொல்லி விட்டு, அந்த வில் முறிந்ததைச் சொல்வதற்கு முன்பே, முறிந்து விழுந்த அந்த ஓசையினால்,

நடுங்கிற்(று) உம்பரே!

[உம்பர் — மேலுலகம்.]

என்கிறாள். ராமன் வில் முறித்த வேகம் போல் இருக்கிறது இவளுடைய மனோவேகமும்!

விண்ணும் நடுங்கிற்று என்றால், இந்த மண்ணுலகம் நடுங்கியதையும், ஜனக ராஜசபை நடுங்கியதையும் சொல்லவா வேண்டும்? எனினும் இதையும் சொல்லப் போகிறாள். அவ்வளவு குதூகலமாகச் சுற்றிச் சுழன்று வருகிறது தோழியுள்ளம், மேலும் கீழுமாக.

மாத்திரை அளவில், தாள்
மடுத்து, முன்பயில்
சூத்திரம் இதுவெனத்
தோளின் வாங்கினான்;—
ஏத்தினர் இமையவர்,
இழிந்த பூமழை,—
வேத்தவை நடுக்குற
முறிந்து விழ்ந்ததே!

[மாத்திரை—ஒரு நொடிப் போது. தாள்—கால். மடுத்து—மிதித்து. பயில்—பழகின. சூத்திரம்—ரகஸ்யம்; விளையாட்டுக் கருவி. வாங்கினான்—வளைத்தான். ஏத்தினர் — புகழ்ந்தனர். இமையவர் — தேவர்கள். இழிந்த—இறங்கியது. வேத்தவை—ராஜ சபை. நடுக்குற—நடுங்கும்படி.]

நொடிப் பொழுதில் அந்தச் செயற்கருஞ் செயலைச் செய்துவிட்டானும். இந்தச் சேடியும், அந்தச் செயலை வைத்த கண் வாங்காமல், இமையாமல், பார்த்துக் கொண்டிருந்தாள். என்? மற்றவர்களைப் போலவே 'நடந்து இமையாமல்' — அதாவது, இமைகளை இமைக்க ஒட்டாமல் நடந்துப்—பார்த்துக் கொண்டிருந்தாள். சீதைமேலுள்ள பேரன்பினால் இவள் அவர்கள் பாராததையும் விசேஷமாய்க் கவனித்துப் பார்த்து விட்டாள் என்று தோன்றுகிறது. அந்தப் படுவேகத்தில் நடந்த செயல்களை மற்றவர்கள் நோக்கியது மில்லை, அறிந்தது மில்லையே!

இப்படி இவள், வில்லின் ஒரு முனையை ராமன் காலால் மிதித்துக் கொண்டு வளைத்ததைப் பார்த்துவிட்டது போலப் பேசினாலும், "அவ்வளவு கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கும் அது ஏதோ ஒரு ரகஸ்யம் போலத் தோன்றுகிறது! ஏதோ முன்னமே பழகிய ஒரு விளையாட்டுக் கருவியைக் கொண்டு அவன் ஒரு வித்தை காட்டியது போலவே தோன்றுகிறது!" என்கிறாள்.

இப்படிச் சொல்லி வரும்போதே, ராமன் வில்லை முறிக்கும் வேகத்தோடு வேகமாய் இவளுடைய மனோவேகம் மறுபடியும் படுவேகமாகிறது:



ஏத்தினர் இமையவர்,
இழிந்த பூமழை,
வேத்தவை நடுக்குற
முறிந்து வீழ்ந்ததே!

என்று முடிக்கிறாள். தேவர்களுடைய புகழ்மழைக்கும் பூமழைக்கும் இடையே முறிந்து விழுந்ததாம் சிவதனுசு, — அந்த லோகத்தோடு இந்த லோகமும் ராஜ சபையும் நடுங்கும்படி. இவ்வளவும் ஒரு நொடிப் பொழுதில் நடந்து முடிந்து விட்டது: சொல்லத்தான் நெடுங்கதை!

தோழி சொன்ன அடையாளத்தால் வில்லை முறித்தவன், தான் காதலித்த அவன் தான் என்று ஊகிக்கிறாள் சீதை. சந்தேகம் நீங்குகிறது.

கோமுனி யுடன்வரு
கொண்டல் என்றபின்,
தாமரைக் கண்ணினான்
என்ற தன்மையால்,
"ஆம்,அவ னேகொல்?" [என்(று)
ஐயம் நீங்கினாள்.

[கோமுனி — விச்வாமித்திரன். கொண்டல் — நீலமேகம் போன்ற ராமன். தாமரைக் கண்ணினான் —

செந்தாமரைபோல் கண்ணழகு வாய்ந்தவன். அவனே கோல — அவனா இருப்பானா?]

சந்தேகம் தீர்ந்து பூரித்தும் போகிறாள் சீதை. எப்படிப் பூரித்துப் போகிறாள் தெரியுமா? "இவளுக்கு இடையில்லையே!" என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இப்போது "உண்டு, உண்டு!" என்று சொல்லும் படி பூரித்துப் போகிறாளாம் :

'இல்லையே நுசுப்(பு)!'என்பார்,
'உண்(டு) உண்(டு)!' என்னவும்...

[நுசுப்பு — இடை.]

இப்படிப்பட்ட நிலையிலும் சந்தேகம் முற்றும் தீர்ந்த பாடில்லையாம். ஏன் அப்படி?

"சொல்லிய குறியின்அத்
தோன்ற லே;அவன்
அல்லனேல், இறப்பன்!" என்(று)
அகத்துள் உன்னினாள்.

[குறியின் — அடையாளங்களால். அத்தோன்றல் — அந்த ஆடவன். உன்னினாள் — நினைத்தாள்.]



கன்னியா சுல்கமாக இருந்த வில்லை முறித்த வீரமா, உள்ளத்தை வசீகரிப்பது? கண்வழியே புகுந்த அந்தக் காதலுக்குத்தான் இவள் உள்ளத்தை அர்ப்பணம் செய்து விட்டாளே! இந்த வீர ராமனைக் காட்டிலும் அந்தக் காதல் ராமனைத் தான் இவள் உள்ளம் ஆசைப்படுகிறது. ஆகவே, "இவன் அவனாக இராமல் போனால் நான் உயிரை விட்டு விடுவேன்!" என்று ஸங்கல்பம் செய்து கொள்ளுகிறாள்.

இது சீதையின் கல்யாண ஸங்கல்பம் என்றால், சீதையின் மணம் காதல் - மணம்தான் என்பது எவ்வளவு தெளிவாக உறுதிப்படுகிறது! வால்மீகியின் வீரத் திருமணத்தைக் காதல் - திருமணமாக்கிய கம்பன் தன்னுடைய சித்திரத்தை எப்படி யெல்லாம் உருவாக்கிச் சொல்லுகிறான், பாருங்கள்!

சீதையின் நிலை இப்படியாக, "இந்த வில்லை வளைத்தல் என்பதும் நடக்கிற காரியமா?" என்று ஏங்கியிருந்த ஜனகன், வில்லை முறித்த ஓசை கேட்டதும் அடைந்த மகிழ்ச்சிக்கு ஒப்பும் உண்டா? வில்முறித்த

ஓசை எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிது ஜனகனுடைய ஆனந்தமும் என்கிறான் கவி :

ஓசையின் பெரியதோர்
உவகை எய்தி, அக்
253 கோசிகற்(கு) ஒருமொழி
சனகன் கூறுவான்.

[எய்தி — அடைந்து, கோசிகன் — விசுவாமித்திரன்.]

இந்த நிலையில் ஜனகன் முனிவனைப் பார்த்து என்ன சொல்லப் போகிறான்? "என்னதான் சொல்லக்கூடும்?" என்று நீங்களே கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள். "இனிமேல் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா? தசரத சக்ரவர்த்திக்குச் செய்தி அனுப்பி அவரையும் கலந்து கொள்ளவேணும். கூடிய சீக்கிரம் காரியங்களைப் பார்க்கலாமே" என்று தானே துரிதப்படுத்தக்கூடும், ஜனகனுக்கு எவ்வளவு ஆத்திரம் இருந்த போதிலும்? ஆனால் ஜனகன் பேச்சு இந்தப் போக்கில் போகவில்லை :

உரைசெய், எம் பெரும! உன்
புதல்வன் வேள்விதான்
விரைவின் இன்(று) ஒருபகல்
முடித்தல் வேட்கையோ?
254 முரசறைந்(து), அதிர்கழல்
முழங்கு தானைஅவ்
அரசையும் இவ்வழி
அழைத்தல் வேட்கையோ?

[எம் பெரும — எமது பெருமானே. வேள்வி — (இங்கே) மண வேள்வி; விவாகம். வேட்கை — விருப்பம். முரசு அறைந்து — முரசு அடித்துப் பலரையும் வரவழைத்து. அதிர் — அதிர்கின்ற. கழல் — வீரக் கழல். தானை — சேனை. அரசு — அரசன்; (இங்கே) தசரதன்.]

என்ன விநோதமான — விபரீதமான கேள்விகள்! தசரதனைக்கூட அழையாமல், நாள் நக்ஷத்திரம்கூடப் பாராமல், ஒரு நாள் - மணமாக, சீதை கல்யாணத்தை நடத்தி முடித்துவிடலாமோ? — என்று துடித்துக் கொண்டிருக்கும் தந்தையை எவ்வளவு தெளிவாய்ப் பார்த்து விடுகிறோம், இந்தப் பாடல் - கண்ணாடியிலே! முகம் காட்டும் கண்ணாடியா? அகம் காட்டும் கண்ணாடியும்கூட! அந்த ஆசையையும் ஆத்திரத்தையும் ஹிருதயத் துடிப்பையும் அப்படியே பார்த்து விடுகிறோம்.

ராமனை இங்கே தசரத ராஜகுமாரன் என்றுகூட ஜனகன் ஒப்புக் கொள்ளவில்லை! விச்வாமித்திர ரிஷிகுமாரன் என்றே மதித்து முனிவனை நோக்கி, "உன் புதல்வன்" என்கிறான். தசரதன் ராமனை விசுவாமித்திரன் வசமாக்கி, "இவனுக்கு நீயே தந்தையும் தாயும்" என்று ஒப்புவித்தான் அல்லவா? விச்வாமித்திரனும் அந்த ஸ்தானத்தை வகித்து ராமனைத் தன் புதல்வனாகவே நடத்தி வருகிறான். ராமனது இந்தத் 'தந்தை'யையே ஜனகனும் ஒப்புக்கொண்டு 'சம்பந்தி'யாக்கிக் கொள்ளப் பார்க்கும் அதிசயத்தையும் அவசரத்தையும் பார்த்தீர்களா? "விரைவில் இன்றே மணம் முடிப்பது தங்கள் விருப்பமா?" என்று தன் விருப்பத்தை விச்வாமித்திரனது விருப்பமாக்கப் பார்க்கும் சாமர்த்தியத்தைத் தான் பார்த்தீர்களா? மேலும், தசரதனை யாரோ ஒரு அன்னியனைக் குறிப்பிடுவதுபோல் "அந்த அரசன்" (அவ்வரசு) என்று குறிப்பிடுவதையும் பாருங்கள்.